# திராவிடநாடு

5—1—58 | வார வெளியீடு | விலை 16 காசு


## சட்டம் பறக்கும்!


[ கலைச்செல்வன் அண்ணாமலைநகர் ]


வான்முட்டும் மாளிகையின் கொம்பர் நின்று
வளமார்ந்த செந்தமிழை இசைக்க எண்ணி
நான்மட்டும் நனிபெரிதும் ஆவல் கொண்டேன்
நாவின்றி மொழி வெளியில் வருதலுண்டோ?
ஊன்கட்டுக் கொண்டவர்கள்; உணர்வே யில்லார்;
ஒருங்குள்ள பெருங்குழுவில் யாது செய்வேன்?
தேன்சொட்டும் மலர்ச்சோலை நாடித் தேடித்
தீச்சுடரில் வீழ்ந்திட்ட சுரும் பரானேன்!

"ஆனாலும் உளம்தளரேன்! தமிழை எந்தன்
ஆவியது போகும்வரை இசைப்பேன்" என்றேன்.
"வீணாகப் பிதற்றாதே எங்கள் இந்தி
விண்போற்றும் மொழி" என்றார் வீணர், நெஞ்சம்
தானாகக் கொதித்தெழுந்து தணிந்து, "என்ன
தறுதலையே வெறியடுக்கா" தென்றேன். "என்ன
தேனாகப் பருகிடுவாய் ஒருமைக்" கென்றால்
சிரம்வறண்ட நிலையன்றி என்ன' வென்றேன்.

"சிறுபிள்ளைத்தனம்" என்றார்; "தேவபாஷை
தெரியாதார் ஒன்றினையும் அறியார்" என்றார்.
கறியுண்ணும் நரி ஆடு நனைதல் கண்டு
கதறி உளம் பதறியதாம்! "கசடீர் உங்கள்
'வரி'க்கணைகள் புகுந்துழக்கும் நெஞ்சம் இந்த
வஞ்சகத்தையும் உணர்ந்து எழுந்து விட்டால்
'சரி'ப்படுத்தல் எதனாலும் முடியாதுங்கள்
சட்டமெல்லாம் பட்டமெனப் பறக்கும்" என்றேன்.

# நாஞ்சில் மாநாட்டு முக்கிய தீர்மானங்கள்

மத்திய அரசாங்க ஊழியர்களின் பஞ்சப்படியாக ரூ. 5 கொடுக்க, அதற்கென நியமிக்கப்பட்ட குழு சிபாரிசு செய்திருப்பதை, மிகவும் குறைவானது என இம்மாநாடு கருதுவதுடன், விலைவாசி உயர்வுக்கேற்ப ஊழியர்களின் பஞ்சப்படியை உயர்த்தாது பிடிவாதம் காட்டிவரும் மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு கண்டிக்கிறது.

*

மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கொப்ப சென்னை மாநிலப் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தையும் உயர்த்தவேண்டும் எனப் பலகாலமாகக் கோரிவந்தும், அக்கோரிக்கையை இதுவரை அலட்சியப்படுத்திவரும் சென்னை அரசாங்கத்தையும், மத்திய அரசாங்கத்தையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

—தலைவர்

*

உணவு நெருக்கடியைச் சமாளிக்க தென்னாட்டினர் அரிசி உணவுப் பழக்கத்தைக் கைவிட்டு கோதுமை உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு கூறுவது, தென்னாட்டினருக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்றும், வடவருக்கு எப்படி வெளிநாடுகளிலிருந்து கோதுமை இறக்குமதி செய்யும் பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறதோ அதேபோல், நமக்கும் அரிசி பெற்றுத்தரும் பொறுப்பினையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—தலைவர்

*

இந்தியத் துணைக்கண்டத்தின் வாய்ப்புகளையும் வசதிகளையும் முன் கூட்டியே ஆராயாமல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்தமுடியாத அளவில் அமைத்து, அதனால் ஏற்பட்ட சிக்கல்களைச் சமாளிக்க முடியாமல், திட்டத்தின் 'அடிப்படை' என்ற பெயரால் வடநாட்டிலுள்ள பெரிய திட்டங்களை மட்டுமே அமுலாக்க முயற்சிக்கும் இந்தியப் பேரரசின் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், உடனே தென்னகத்தின் இயற்கை வளத்தை நாட்டு மக்களின் நன்மைக்காக முற்றிலும் பயன்படுத்தும் வகையில் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலமும், வேண்டிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலமும், திராவிட மக்களுக்கு நீதி வழங்கும் வகையில், நாட்டின் பொருளாதார நிலை தொடர்ந்து சீர்குலையாது பாதுகாக்கப்படும் முறையில், திட்டத்தைத் திருத்தி அமைக்கும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

முன்: செழியன்
வழி: வி. பி. இராமன்

*

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகக் கூறிக்கொண்டு பல கோடி ரூபாய்களைப் பாழ்படுத்தி நடத்தப்படும் தேசிய அபிவிருத்தித் திட்டம் பயனற்றதாகவும், ஊழல் நிறைந்ததாகவும், வெறும் கண்துடைப்பு வேலையாகவும் இருந்துவருகிற தன்மையை திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு எடுத்துக்காட்டி வந்திருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பல்வந்த்ராய் குழுவின் அறிக்கை இருப்பதை அரசியலாரின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், வெறும் கண்துடைப்பு வேலையாக மட்டும் இருப்பதை மாற்றி, மக்கள் அனைவருக்கும் பயன்தரும் விதத்தில்—கட்சியின் ஆதிக்கத்திற்குப் பயன்படுத்தாமல் எல்லாப் பகுதிகளுக்கும் உதவும் வகையில் திட்டத்தைத் திருத்தி செம்மையாக—நடத்துமாறு மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: கே. இராசாராம்
வழி: ஆர். மாணிக்கம்

*

(அ) புதிய ஸ்தல ஸ்தாபன மசோதா மக்களாட்சியையும், கிராம அரசையும் வளர்ப்பதற்குப் பதிலாக ஏற்கனவே மேற்படி அமைப்புகளுக்கு உள்ள உரிமைகளையும், அதிகாரங்களையும் பறித்து அதிகாரவர்க்கத்திடம் ஒப்படைத்து, மக்களாட்சி முறையையே கெடுப்பதாக இருக்கிறதாகையால், இம்மாநாடு இந்தப் புதிய முறையினை வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் நடத்துவது என்ற கருத்தை சென்னை அரசாங்கம் சொல்லிவருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கனவே பொதுமக்களால் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்த சனநாயக முறையையே கடைப்பிடித்து வரவேண்டும் என்று சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.

முன்: ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,
வழி: எம். குழந்தைவேலு எம்.சி.,

*

தமிழகத்துடன் இணைக்கப்பட்ட திட்டத்தில் டெல்லி ஏகாதிபத்திய ஆட்சியினரின் அதிகார பலத்தாலும், தமிழ் மாநில அரசியலாரின் கவலையற்ற போக்கினாலும் விடுபட்டுப்போன பகுதிகளான நெய்யாற்றின் கரை, தேவிகுளம், பீர்மேடு சிற்றூர் வட்டங்களையும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும் தமிழ் மாநிலத்துடன் இணைக்கவேண்டிய முயற்சியில் தீவிரமாக இறங்குமாறு தமிழ் மாநில அரசினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: தூத்துக்குடி ஜோசப்
வழி: நாஞ்சில் அன்பெழில்

*

இதுகாறும் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய்க்கு ஒன்றரை அணா என்ற அளவில் கொடுத்து வந்ததை 1957-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் ஒரு அணாவாகக் குறைக்கப்பட்டிருப்பதுடன், இன்னும் ஓராண்டுக்குள் அந்த உதவித் தொகையை அறவே நிறுத்திவிடப் போவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்ற மத்திய அரசினரின் உத்தரவை வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கனவே நசிந்துவரும் கைத்தறித் தொழிலை மேலும் சிதறடிக்காமல் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க உதவித் தொகையை ஒன்றரை அணாவாகவே கொடுத்து வரவேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: மதுரை சந்தானம்
வழி: டி. ஆர். சுப்ரமண்யம்
,, அலமேலு அப்பாதுரை

*

இந்தியத் துணைக்கண்டத்தில் ஓர் பகுதியாக இன்று திராவிடம் பிணைக்கப்பட்டிருப்பினும் திராவிடக் கூட்டாட்சி எனும் தனி அரசுக்காகப் பாடுபட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவுக்கு ஒரு பொது மொழி தேவை என்ற தத்துவத்தை மறுக்கிறது.

இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்ற போலித் தத்துவத்தைக் காட்டி இந்தி ஆட்சி மொழியாக ஆகவேண்டும் எனக் கூறிவரும் டெல்லி ஆதிக்கத்தின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(16-ம் பக்கம் பார்க்க)

# நேருவுக்கு கருப்புக் கொடி!

[மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [ 5—1—58 ] தனிப் பிரதி 16-காசு [ இதழ் 25

நேரு வருகிறார்! வருகிற 6-ந் தேதி, சென்னைக்கு வருகிறார்!!

அவர் வருவதிலும் போவதிலும் வியப்பு மில்லை—நமக்கு ஆட்சேபணையுமில்லை. ஆனால், ஒவ்வொரு தடவை வரும்போதும், அவர் தென்னாட்டை, ஏளனமாகவும் எரிச்சலாகவுமே மதித்துப் பேசுகிறார்.

உலகத் தலைவர்களுள் ஒருவராகி விட்டவர் நேரு! ஆனால் அவர், தென்னாட்டுக்கு வரும்போதெல்லாம், அந்தப் பெருந்தன்மையைக் கொஞ்சம் ஒதுக்கியே வைத்துவிடுகிறார்—இங்கேயிருப்பவர்களையெல்லாம், ஏனோதானுக்களென்றும், இவரது எடுபிடிகள் போலவும் எண்ணிக் கொண்டே பேசுகிறார்.

தோழர் ம.பொ.சி. யின் எல்லைப் போராட்டம் நடந்தபோதும் சரி, நமது உரிமைப் போராட்டம் நடந்த பிறகும் சரி, பெரியார் அவர்களின் சாதி ஒழிப்பைக் குறித்தும் சரி, நேரு அவர்கள் சிந்திய வார்த்தைகள் இன்னும் காற்றோடு போய்விடவில்லை. இவை போதாதென்று, ஆச்சாரியாரும் அவர்போன்ற முதுபெரும் அரசியல் பெரியவர்களும் இந்தியை எதிர்ப்பதைக் கண்டதும், கொஞ்சங்கூட மதிப்பின்றி, தனது 'வசை புராணத்தைப்' பாடியிருக்கிறார்.

தென்னாட்டைப் போல வடநாட்டிலும் பல விதமான கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன — நடக்கின்றன. பஞ்சாபில் இந்திமொழி எதிர்ப்பும், மராட்டியத்தில் உரிமைக் கிளர்ச்சியும், மிக மிக உத்வேகமாக இருந்து வருகிறது. அங்கு 'விஜயம்' செய்யும்போதெல்லாம் நேருவுக்கு அவ்வளவு ஆத்திரமும், ஏளனமும் பிறப்பதில்லை. குழைகிறார்! வளைகிறார்!! ஆனால், தென்னாட்டில், எந்தவித கிளர்ச்சியென்றாலும், கிளர்ச்சியிலீடுபடுபவர்கள் யாரானாலும், தோள் தட்டுகிறார்! சொல்லொணா வார்த்தை அம்புகளைத் தொடுக்கிறார்!!

சின்னாட்களுக்கு முன் திருச்சிக்கு வந்து அவர் பேசியபோது, பெரியார் அவர்களை நாட்டைவிட்டே துரத்திவிட வேண்டும் என்றார். பெரியாரைப் போல நேருவின் ஆட்சியையும், இந்திக் கூட்டத்தையும் தாக்குகிறவர், பஞ்சாப் தலைவர் தாராசிங்! அவரை, இப்படியொரு போதும் பேசியதில்லை, நேரு. மாறாக, அழைத்துப் பேசி, குலவியதுண்டு. காந்தி கிராமத்துக்கு வருவதற்கு முன், மராட்டியத்தில் சிவாஜி சிலையைத் திறக்கப்போயிருந்தார்-மராட்டிய மக்கள், பல்லாயிரக் கணக்கில் கூடியிருந்து, கருப்புக் கொடி காட்டினர், அவருக்கு. அப்போதுகூட அவர், 'நான்சென்ஸ்','காட்டுமிராண்டித்தனம்', 'பைத்யக்காரர்கள்', 'முட்டாள்கள்' என்று ஏசவில்லை! மாறாக, மராட்டிய மக்களின் வீரத்தையும் தீரத்தையும் மிகமிகப் புகழ்ந்து பேசினார்!!

மராட்டியர்களைவிடவோ, பஞ்சாபியர்களை விடவோ, வீரத்திலும் தீரத்திலும் குறைந்தது அல்ல, தென்னாடு. அங்கெல்லாம், கிளர்ச்சிகள் என்றால், கொடுமையும் கோரமும் நர்த்தனமாடும். சாவுப் பட்டியலும், நடைபெற்ற கலவரங்களும் பெரிதாக வரும். தென்னாட்டிலோ, எந்தக் கிளர்ச்சியும், சாந்தமாகவும் அமைதியாகவுமே நடக்கும்-எனினும் அவருக்குத் தென்னாடு என்றால்தான் எரிச்சலும் ஆத்திரமும் அதிகமாகிறது. ஏசுகிறார்! கடுமையான சொற்களை வீசுகிறார்!!

தமிழ்மண், வீரத்திற்கு மட்டுமல்ல, அன்புக்கும் பெயர்போன மண். வடவரைவிட எல்லா வளங்களிலும் சிறந்த பூமி, இது. வீண் வம்பும், வேண்டாத கிளர்ச்சியும் விரும்பாதவர்கள், நாம். இங்கு துவக்கப்பட்ட எந்தக் கிளர்ச்சிக்கும் ஒரு அனுதாபப் பார்வைகூடக் காட்டியதில்லை, நேரு. எல்லைப் போராட்டம், நடந்தது! ஏசினார், பேசினார். பீர்மேடும், தேவிகுளமோ, இழந்தோமேதவிர, நீதி தரவில்லை, அப் பெரியவர். 'தமிழ்நாடு', கேட்டோம் — திமிர்க் குரல் கிளம்பிற்றே தவிர, உரிமை கொடுக்கவில்லை, அவர். டால்மியாபுரம், பெயர் மாற்றம் கேட்டோம்; பற்களை நற நற வென்று கடித்தாரே தவிர, நீதி தரவில்லை. பெரியார், சாதிகளை ஒழிக்கவேண்டும் என்கிறார்; பரிசு, பைத்யக்

காரப்பட்டம் அளிக்கப்பட்டதே தவிர, அந்த ஒப்பற்ற பணியாளரின் குரலுக்கு மதிப்புத் தரவில்லை, அவர். இவ்வளவும் போகட்டும் — நாமெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதால் இவ்வளவு ஆத்திரமும் அலட்சியமும் காட்டுகிறார் போலும் என்று நினைத்திருந்தோம். ஆனால், 'அது தவறு. எனக்கு தென்னாடு என்றாலே, ஏளனம்தான் எப்போதும்' என்று காட்டுவதைப்போல, ஆச்சாரியாரையும் அவர் கூட நிற்கும் சர். சி. பி. போன்றவர்களையும் சாடியிருக்கிறார். ஆச்சாரியார், இந்திய உபகண்டத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர்! ஒப்பற்ற விவேகி என்று வெளிநாட்டவரால் கூடப் போற்றப்படுபவர்!! அவரும், பைத்யக்காரர் — பெரியாரும் பைத்யக்காரர் — உரிமை கோரும் தி. மு. க. வினரோ சிறுபிள்ளைகள்— தமிழ்நாடு கேட்போர் 'நான்சென்ஸ்'கள்—என்றால், அவர் நம்மை எப்படி மதிக்கிறார் என்பது விளங்கும்.

இவர்கள் எல்லாம், கொடி தூக்கியும், மில் துணிகளை எரித்தும், உப்பு எடுத்தும், இரயிலையும் தபாலாபீசையும் கொளுத்தியும், 'சுதந்திரப் போர்' நடத்தியபோதெல்லாம், இவர்கள்தம் கோரிக்கைகளை அவ்வளவு எளிதில் ஏளனம் செய்துவிடவில்லை வெள்ளையன்! மக்களின் குமுறல்கள் என்கிற அளவுக்கு மதிப்புக் கொடுத்தான்!!

இதே மதிப்பை, வடக்கில் நடைபெறும் கிளர்ச்சிகளுக்குக் காட்டமுடிகிறது நேருவால். -அஸ்ஸாமியருடைய எண்ணெய்ப் போராட்டத்திலிருந்து மராட்டியரின் மனக் கிளர்ச்சி வரையில் அறிவதற்கு ஆவல்காட்ட முடிகிறது நேருவால்—ஆனால், தென்னாட்டின் பிரச்னைகள் என்றால்தான்,—அது ஆச்சாரியாருடைய கூற்றானாலும், தமிழரசு கழகத்தின் முயற்சியானாலும், ஜனநாயக காங்கிரசின் (கா. சீ. க.) கோரிக்கையானாலும், பெரியாரின் பேச்சானாலும், நம்முடைய கோரிக்கையானாலும் — அலட்சியமும், அநாவசியமான வார்த்தை வீச்சுகளும் காட்டப்படுகிறது நேருவால்!!

அமெரிக்காவை மதிக்க முடிகிறது அவரால்— சிறு நாடு ஜப்பானை மதிக்கத் தெரிகிறது அவருக்கு —உதைக்கும் ஆபிரிகாவுக்கு ஓடோடியும் அன்பு காட்டுகிறார் — விரோதியாக விளங்கிய வெள்ளையனுக்கு அரவணைப்புத தர இயலுகிறது—காந்தியடிகளின் உயிரைப் பொசுக்கிய கட்சியிடமும் 'கருணை' காட்ட முடிகிறது-ஆனால, அன்பும் பண்பும் விளங்குமிடம், அகிம்சையின் சொந்த இடம், குறளும் சிலம்பும் ஒலிக்குமிடம், குன்றாத வளங்கள் கொண்ட இடம், அறிவு மணிகள் வாழுமிடம், உலகுக்கே நாகரிகம் போதித்த இடம், உன்னதக் கலைகள் சிறந்த இடம், உத்தமத் தியாகிகள் வாழ்ந்த இடம், நமது தென்னகத்தை மட்டும் மதிக்க மறுக்கிறார்! ஏதோ, இவரது காலடியில்கிடக்கும்'காளான்'களைப்போலநம்மைமட்டுமல்ல—ஆச்சாரியார் உள்பட அனைவரையும் நினைக்கிறார்—நான்சென்சுகளா! காட்டுமிராண்டிகளா! சிறுபிள்ளைகளா! முட்டாள்களா! பைத்தியக்காரர்களா! என்றெல்லாம், ஏதேதோ ஏசுகிறார். பெரியார் போன்றவர்களை நாட்டைவிட்டே விரட்டவேண்டும் என்கிற அளவுக்குப் போகிறார்.

அவர் உலகத் தலைவர்! நிச்சயமாக நாம் அவரை மதிக்கிறோம்!!

தியாகங்கள் பல புரிந்தவர் நேரு! நிச்சயமாகத் தலைவணங்குகிறோம்!!

ஆனால், அவர் இதுபோல, நம்மை, ஒருமுறையல்ல, இருமுறையல்ல, தொடர்ந்து ஏசுவதையும பேசுவதையும் மட்டும் நாம், இனியும் அனுமதிக்கத் தயாரில்லை.

சொல்வது யார் என்பதைவிட, சொல்லப்படும் குறைகளைபற்றிக் கவனிக்கவேண்டியது, ஒரு அரசியல் தலைவனின் கடமையாகும். நேரு அரசியல் தலைவர் மட்டுமல்ல, உபகண்டத்தையாளும் பொறுப்பிலுமிருப்பவர். இட்லர் — முசோலினி — பிராங்கோ போல, சர்வாதிகாரியோ எனில், தன்னை ஒரு ஜனநாயக வாதியென்றும் கூறிக்கொள்கிறவர். இப்படிப்பட்டவர், தென்னாட்டின் எந்தப் பிரச்னைகளையும், கேவலமாகவும் அலட்சியமாகவும் கருதுகிறார் என்றால், அவருடைய தவறான பாதையை யாராவது எடுத்துக்காட்டத்தான் வேண்டும்!!

எனவேதான் நாஞ்சிலில் கூடிய தி. மு. க. **வரும் 6-ந்தேதியன்று நேரு சென்னைக்கு வரும்போது, கருப்புக் கொடி காட்டி அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்வதென்றும் — அன்று மாநிலம் முழுவதிலும், கண்டனக் கூட்டங்கள் நடத்துவதென்றும்** முடிவு செய்திருக்கிறது.

சென்னையில் கருப்புக்கொடி காட்டுவதில், நமது மாநிலத்தின் சட்டசபையில் தி. மு. க. சார்பில் வீற்றிருக்கும் சட்ட மன்றப பிரதிநிதிகளும்—டில்லிப் பாராளுமன்றத்தில் தி. மு. க. பிரதிநிதிகளாயிருப்பவர்களும் கலந்துகொள்வார்கள்.

சென்னை, அன்று 'கருங்கடலாக' காட்சியளிக்கும் என்பதில், நமக்கு ஐயமில்லை.

அமைதியும், சாந்தமும் விளங்கும் வகையில் இந்தக் கண்டனம் நடைபெறும்.

மதிப்பளிக்கத் தெரியாதவர்களுக்கு, அரசியல் கண்ணியம் இழந்தவர்களுக்கு, பாடம் புகட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கு இருக்கிறது.

புண்ணின்மேல் ஈட்டிகள் வீசப்பட வீசப்பட, பொறுத்துக்கொள்ளத்தானா நாம் பிறந்தோம்? 'மானம்' ஒன்றே நல்வாழ்வெனக்கொண்டு வாழ்ந்த தமிழ் மரபு, தருக்கர்தம் ஆதிக்கத்தால் தரைமட்டமாகித் தவிக்கிறது, என்றால், இப்படி ஏளனத்துக்கும் கேலிக்கும் ஆளாகி, அவதிப்படையவா, நாம் பொதுப்பணியிலீடுபட்டோம்.

தவறியவருக்கு, உணர்த்தும், நற்பணி இது. வீரர்காள்! வழக்கம்போல், வெற்றியாக்குங்கள்— வீரத் திருமரபின், புகழ் காட்டுங்கள் — தி. மு. க. தனக்கு வரும் இழுக்கை மட்டுமின்றி, தன்னவருக்கு வரும் —அவர்கள் எந்தக் கூடாரத்திலிருந்தாலும்—வரும் தாக்குதலையும் கண்டிக்கத் தயங்காது, என்பதையும் நிலைநாட்டுங்கள்!!

★



# கம்பிகளுக்குப் பின்னால்!

பெரியார் அவர்கள், சிறைக்குள்ளே கிடக்கிறார். பல்லாயிரக் கணக்கான நாட்டு மக்கள் நெஞ்சம் வேகின்றனர் தள்ளாத வயது, தடியூன்றிடும் கட்டம், எண்பதை நெருங்கும் பருவம்; இந்த நிலைமையில் அவருக்கு, சிறைவாசம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. "நீதிமன்றத்தில் பதில் அளிக்கும்போது அவர் உடல் ஆடிக்கொண்டேயிருந்தது", என்று குறிப்பிடுகிறார், செஷன்ஸ் நீதிபதி. அவ்வளவு வயதானவர், பெரியார். வயதானால் என்ன, சட்டம் தன் கடமையைச் செய்துதானே ஆகவேண்டும் என்பார்கள் சட்ட நிபுணர்கள்.

சிறை, பெரியாருக்குப் புதிதல்ல; "இதயத்தில் ஏற்றிருக்கும் இலட்சியத்துக்கு நாம் கொடுக்கும் 'விலை'" என்று எத்தனையோ தடவை கூறியிருக்கிறார், அவர்.

நீதிமன்றத்தில் எதிர் வழக்காடவோ, குறுக்கு விசாரணை செய்யவோ அவர் விரும்பவில்லை. இதுவே போதும், அவர் உள்ள உறுதியை விளக்க.

தீர்ப்புப் பெறுவதற்கு முதல் நாள் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில், சில பார்ப்பனர்களைக் கொல்வதாலோ, ஒரு சில அக்கிரகாரங்களைக் கொளுத்துவதாலோ, சாதியை ஒழித்துவிட முடியாது என்று அவர் தெளிவாக எடுத்துச் சொன்னதாகத் தெரிகிறது. ஏடுகளும், அதை வெளியிட்டிருக்கின்றன.

சட்டம், தன் பாதையில் சென்றுவிட்டது. இப்போது, நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, ஆவன செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. அமைதியையும், நல்லாட்சியையும் விரும்புவோர், இதுபற்றிச் சிந்திக்காமலிருக்க முடியாது.

கம்பிகளுக்குப் பின்னால், பெரியார் அவர்கள் கிடப்பதைக் கண்டு 'அப்பாடா!' என்று பெருமூச்சு விடும் சிலரும் இருக்கிறார்கள். அவர்கள், பெருந்தன்மைக்கு மதிப்புக் கொடுக்காதவர்கள். வெறியைத் துணைக்கழைப்பவர்கள். மனித இதயம் துறந்தவர்கள்.

பெரியாருக்கு அளிக்கப்பட்ட தண்டனை போதாது என்று கூறும் சிலரும் இருக்கிறார்கள்! இவர்கள், ஆத்திரத்தால், அறிவுக்குத் திரையிட்டுக் கொண்டவர்கள; குரோதத்தையும், தோல்வி மனப்பான்மை தந்த ஆத்திரத்தையும் மனதிலே வளர்த்துக் கொண்டிருப்பவர்கள்; சிந்திப்பதற்குப் பதில் 'சின்னப் புத்தி'யைக் காட்டுகிறவர்கள். சுற்றி வளைத்து, வார்த்தைகளை எண்ணி, வாய் 'ஜாலம்' பேசினாலும், அவர்களது இதயத்தில் கிடக்கும 'இருள்' பிறருக்குத் தெரியாமற் போகாது!!

"கிளர்ச்சிக்காரரை"ப் பிடித்து அடைத்துச் சிறையில் போடும்படி செய்துவிட்டோம் என்று "மேலிடத்திலிருப்பவர்கள்" பெருமூச்சு விடக்கூடும்! பேரானந்தமும் காணக்கூடும்!!

அவர்களெல்லாம் ஒன்றை மறந்துவிடுகிறார்கள்—சென்னைக் கூட்டமொன்றில், தள்ளாத கிழவர் வெளியிட்ட தெளிவான வாசகங்களுக்குப் பின்னும், சிறைக்குள் போட்டு மூடப்பட்டிருப்பது கண்டு கொதிக்கும் உள்ளங்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளன என்கிற உண்மையை!!

விளக்கம் கொடுத்தார்-தெளிவு அளித்தார்—மனதாரப் பேசினார், என்று எந்தப் பெயரிட்டு வேண்டுமானாலும் சொல்லட்டும். தன்னுடைய நோக்கம் பலாத்காரம் அல்ல என்று தெளிவாகப் பேசியிருக்கிறார், பெரியார். பார்ப்பனரைக் கொல்வதாலோ, அவர்கள் குடியிருக்குமிடங்களைக் கொளுத்துவதாலோ தன்னுடைய இலட்சியமான சாதி ஒழிப்பு நிறைவேற முடியாது என்றும் விளக்கமாக வெளியிட்டிருக்கிறார்.

சட்டத்தின் ஷரத்து, அதற்குள்ளே பொதிந்து கிடக்கும் அம்சம், ஆகியவைகுறித்துச் சட்ட நிபுணர்களுக்கு சிரத்தையிருக்கக் கூடும். ஆனால், மக்கள், தங்கள் மனப்போக்கை, தத்தமது தலைவர்கள் தரும் "விளக்கம்" கொண்டே அமைத்துக் கொள்வார்கள. பெரியாரின் விளக்கம், யாவருக்கும் திருப்தியளிக்கும் விதத்தில் இருக்கிறது. ஆனால், 'குரோத மனம் கொண்டோர்' தவிர்த்து, மற்ற எல்லோரும், இதற்குப் பின்னும் பெரியார் ஏன் சிறைக்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்றே கேட்பார்கள்.

மக்களின் குரலையும் மன நிலையையும் மதித்து, உடனடியாகப் பெரியாரை விடுதலை செய்வதே விவேகமானதாகும் என்று ஆள்வோருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அரசியல் சட்டத்தை எரித்தது இனி தொடர்ந்து நடக்காது—அதிருப்தியைக் காட்டும் அடை

யாளமாகச் செய்யப்பட்டதுதான் அது—ஒரு நாள் மட்டுமே நடத்தப்பட்டது — என்று பெரியாரே சொல்லியிருக்கிறார். அதோடு, தனது கழகத்தவரை, பலாத்காரத்துக்குத் தூண்டும் நோக்கமும் தனக்கு இல்லையென்று உறுதி மொழி அளித்திருக்கிறார். இதோடு மட்டுமின்றி, பார்ப்பனர்களைக் கொல்வதாலோ, குடியிருக்குமிடங்களைக் கொளுத்துவதாலோ சாதியை ஒழித்துவிட முடியாது என்பதையும் வெளியிட்டிருக்கிறார்.

பெரியாரின் இந்த மொழிகள், வரவேற்கப்பட வேண்டியதாகும்; இந்த வார்த்தைகளை ஏற்று பெரியாரையும்; அவரைப்போல, கொண்ட கொள்கைக்காகச் சட்டத்தை மீறிச் சிறைக்கோட்டம் சென்றிருக்கும் ஆயிரக்கணக்கான தோழர்களையும், தோழியர்களையும் உடனடியாக விடுதலை செய்து, தனது பெருந்தன்மையையும், புத்திசாலித்தனத்தையும், இச்சமயத்தில் அரசாங்கம் காட்டிக் கொள்ளவேண்டும்.

ஆள்வோர், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தக்கது செய்யாவிடில், எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுகிறார்கள் என்றே பொருள்படும். மக்கள் மன்றம், ஆள்வோரின் பிடிவாதம் கண்டு, கண்டித்தெழும் நிலை ஏற்படக்கூடும். மக்களின் குரல், சட்டத்தின் முன்னால் எப்படிக் கருதப்படினும், நாட்டின் வாழ்வில் சாதக பாதகங்களை ஏற்படுத்தும் தன்மைவாய்ந்தது என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது.

பெரியாரையும் அவரது தொண்டர்களையும் சிறைக்குள்ளேயே வைத்திருப்பதால், யாருக்கும் பயனுமில்லை; பலனுமில்லை. ஏதோ சில பார்ப்பன குல "பெரியவர்கள்", ஆபத்து, ஆபத்து என்று எழுப்பிய கூச்சலுக்காக, அம்முதுபெரும் கிழவரைக் கொண்டுபோய்ச் சிறையில் போட்டிருக்கிறார்களே! — என்றுதான், மக்கள் எண்ணுவர்; பேசுவர். இது, வகுப்பு ஒற்றுமையை வளர்க்க வழி செய்யாது.

பார்ப்பன குல "பெரியவர்கள்", மிரட்டி, தூண்டி, இதுபோன்ற நிலைமைகள் ஏற்படும்படி செய்வதற்குப் பதில் சந்தித்தும், தொடர்பு கொண்டும், சமரசமாகப் பேசியும், விளக்கம் விரும்பியும், நல்லெண்ணமும் நம்பிக்கையும் மலரச் செய்திருக்கலாம். இது, பலனும், ஒற்றுமையை மலர்விக்கும் சூழ்நிலையையும் உருவாக்கப் பெரிதும் உதவியிருக்கும். இதுபோல, "அந்தப் பெரியவர்கள்," நடந்துகொள்ளவில்லையே, என்று பெரிதும் நாம் வருந்துகிறோம்! இவ்வளவுதூரம் நிலைமை வளரக் காரணம் அவர்கள்தான் என்றும் குற்றம் சாட்டுகிறோம்.

ஆச்சாரியார் அவர்கள், இந்திப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க, பலதரப்பட்ட அரசியல் கட்சிகளையும், அவைகளின் தலைவர்களையும் அழைக்கவில்லையா—அணுகவில்லையா? முன்பு இப்படியோர் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றபோது பெரியார் இராமசாமிகூட அழைக்கப்பட்டு, கலந்துகொண்டாரே! பெரியார், அப்போது எப்படி நடந்துகொண்டார்? ஆச்சாரியார் அவர்களிடம், அன்போடும், நட்போடும் நடந்துகொண்ட காட்சியைக் கண்ணாரக் கண்டோமே! எனவே, பலதரப்பட்டவர்களையும், ஒரு நல்ல நோக்கத்துக்கு ஒன்று திரட்டும் சக்தி பெற்ற ஆச்சாரியார், ஏன் பெரியாரைப் பதப்படுத்தவும், அவரது நம்பிக்கையைப் பெறவும் இயலாதவரா? என்றால் முடியாது — இது வெளிமாகாணத்து விவகாரம்— என்றா சொல்ல முடியும் அவர்? பெரியாரைக் காணவும் பேசவுமான பொறுப்பையேற்க ஆச்சாரியாரே மறுத்தால், யார்தான் இருக்கிறார்கள் பிறகு? இருவரும் வயதானவர்கள் என்பதோடு, ஒருவருக்கொருவர் எவ்வளவு மரியாதையும் மதிப்பும் அன்பும் வைத்திருக்கிறார்கள் என்பது, எல்லோருக்கும் தெரியுமே!!

இப்படியொரு "கட்டம்" ஏற்படுவதை விட்டுவிட்டு, சிக்கலான சூழ்நிலை உருவானதும், அந்தச் சூழ்நிலையையே காட்டி வாய்மூடி மௌனியாவதும், வம்பை வளர்ப்பதும் நல்லதா.

ஆச்சாரியார் போன்றவர்கள், பார்ப்பன குலத்தின் முன்னோடிகளாக விளங்கும் மற்றவர்களோடும் சேர்ந்து, பெரியாரைக் கலந்து பேசி, சாதி ஒழிப்புச்சம்பந்தமாகத் திடமும் தீவிரமுமான வழிவகைகளைக் காணும் முயற்சியிலீடுபட்டால், இப்படியெல்லாம் ஏன் வரப்போகிறது? ஆச்சாரியார் போன்ற பேதைகள், சாதி ஒழியக்கூடாது என்றாவது சொல்ல முடியுமா! ஒரு வேளை, இந்த முயற்சியால் ஏற்படும் குழப்பங்கள், தலைகீழ் மாற்றங்கள் அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடும். அந்த அதிர்ச்சியையும், கூடிப்பேசி, ஒரு திட்டம் வகுத்து தவிர்த்துக்கொள்ள இயலுமே. ஏதோ, தத்தமது விருப்பு வெறுப்பைக் காட்டிக் கொள்ளும் ஒரு 'கட்டம்' எனக் கருதக்கூடாது. பெரியவர்கள் அன்பும், அனுதாபமும் கொண்டு அறிவுத் தெளிவோடு கவனிக்க வேண்டிய பிரச்னையாகும் இது.

கத்தியின் மூலமோ அல்லது தண்டனைகள் பெற்றுத் தருவதன் மூலமோ தீர்க்கக்கூடிய பிரச்னையல்ல, இது. இரண்டும், இந்தத் தீராத் தொல்லையைத் தீர்க்கும் வழிகளல்ல. வேதனையை, இது வளர்க்குமே ஒழிய தீர்க்காது.

**சிலர் நினைப்பதுபோல இந்தப் பிரச்னை, இரண்டு வகுப்புகளுக்கு இடையே மட்டும் இருக்கிற பிரச்னையல்ல. நாட்டின் மொத்தப் பிரச்னை.**

தாழ்த்தப்பட்டவர்களின் உணர்ச்சித் தீ, கொழுந்துவிட்டெரிகிறது! "வலுத்தோர்" அதை அணைக்கவும் அடக்கவும் முனைகின்றனர்!! — இப்படிப்பட்ட பிரச்னையை, கிண்டல் செய்வதாலோ, கார்ட்டூன் போட்டுக் காட்டியோ, தீர்த்துவிடமுடியாது. இவை, எரிச்சலை அதிகமாக்கவே செய்யும். 'தடி'யின் மூலம் இந்த எழுச்சியை அடக்க முயல்வதென்பதும் நிச்சயமாக முடியாது.

நல்லெண்ணத்தின் மூலம், அறிவைத் துணைக்கொண்டு, ஒரேயடியாகத் தீர்த்து ஒரு முடிவுகாண வேண்டிய பிரச்னையாகும் இது. இயலுமா எனின், நிச்சயமாக முடியும் என்போம்! பெரும் பொறுப்புகளையும் சேவைகளையும் செய்தவர்களால், இதைத்தானா, சாதிக்கமுடியாது!!

திருக்கோவிலூரில் நமது ஏஜண்டு

*

எம். முல்லைவேந்தன்
12. ஆறுமுகம் சோடா கடை,
பஸ் ஸ்டாண்ட்
திருக்கோவிலூர்.

சிக்கல் தீராது—பலன் கிடைக்காது என்று பயமும் பராமுகமும் உருவாகிக் கிடந்த நாட்களிலே, முன் யோசனையும், விவேக புத்தியும் கொண்டு, "பாகிஸ்தான் கொடுத்துத் தீரவேண்டிய ஒன்றுதான்!", என்று துணிவோடு சொன்னவர் ஆச்சாரியார். திகைத்தனர் பலர் இவரே இப்படிச் சொல்கிறாரே, என்று! எனினும், பிரச்னையை நுட்பமாகவும், தெளிவாகவும் உணர்ந்து, வருவதை முன்கூட்டியே உரைத்தார். அவர் உரை, இன்று கனவாகவில்லை!! அன்று காட்டிய அந்த உறுதியும், வருமுன்னுரைக்கும், கூர்த்த மதியும், இன்றும் அவரிடமிருக்கின்றன என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை. இருந்தும், நாட்டை அலைத்துக் குலைக்கும் பெரியதோர் பிரச்சினையில், அவர் காட்டும் அலட்சியமும், வேற்றுமையும், அவருக்கும் சரி, நாட்டுக்கும் சரி நல்லதல்ல என்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இப்போது, பொறுப்புச் சுமைகளோ, அதிகார பீட வேதனைகளோ அற்ற நிலையிலிருக்கிறார் அவர். நிச்சயம், முன்வரலாம், இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட. நண்பரும் சகாவுமான பெரியாருடன் பேசி, வழிதேடலாம்! இதைவிட்டு, பேசாதிருந்தால், சாதி ஒழிப்பில் ஆச்சாரியாருக்கு அக்கறை கிடையாது என்கிற முடிவுக்கே மக்கள் வந்து சேர நேரும்.

கம்பிகளுக்குப் பின்னால், பெரியார் நிற்கிறார்! ஆனால், மக்கள் மன்றத்தின் முன்னால் பலர் இருக்கின்றார்கள்!! பெரியாரையும், சிறையில் வாடும் ஆயிரக்கணக்கானவர்களையும் விடுதலை செய்யுமாறு வற்புறுத்தும் கடமையுண்டு அனைவருக்கும். குரலை ஏற்கும் பொறுப்பும் ஆள்வோருக்கு இருக்கிறது. அக்கட்டம் ஏற்பட்ட பிறகு, எல்லோருமாக ஒன்றுகூடி சாதி ஒழிப்புப் பற்றிப் பேசி, ஒரு உன்னத முடிவுக்கு வரவேண்டும். அந்த நல்ல நாள், உதயமாகும் போதுதான், நாட்டின் எதிர்காலம் நல்ல சூழ்நிலைக்கு வந்துள்ளது என்ற நம்பிக்கை பிறக்கும்.

★

# அன்னையின் கண்ணீர்!

(சுப. கோ. நாராயணன்)

'வையகத்தை வென்று வான்புகழ் பெறுவேன்' எனச்சூளுரைத்து, சுழலும் பம்பரமெனப் பல நாடுகளின் மேல் படையெடுத்து பெரும் வெற்றி கண்ட மன்னன், மாவீரன் அலெக்சாண்டர்! இவன் அரசியல் கற்றதோ, அறிவுக் களஞ்சியமென அவனி போற்றும் அரிஸ்டாட்டிலிடம்! வீரமும், விவேகமும் இணைந்தால், வெற்றியன்றி வேறு என்ன காண முடியும்?

அத்தகு தீரனின் அன்னைதான், ஒலிம்பியஸ் என்பாள். அரசியல் சூழ்ச்சிகளை நன்குணர்ந்தவள்; அதிகார மோகங்கொண்டவள்; எனவே, அரசியல் விவகாரங்களில் அனாவசியமாகத் தலையிட்டாள். செந்தேள் கூடச் சில சமயங்களில் கொட்டாமலிருக்கலாம்! ஆனால் அதிகாரம் செலுத்திப் பழகிய அரசியல் மனிதர்கள், அதிகாரம் செய்யாமல் சும்மாயிருக்க இயலாதே! தன் தாய் இப்படி அரசியல் விவகாரங்களில் நுழைவது, அலெக்சாண்டருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை; என்ன செய்வது? அன்னையிடம் 'தாயே, தாங்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். வீணாக இந்த அரசியல் சேற்றிலே சிக்கி வருந்துகிறீர்கள்' என ஆயிரம் முறை வேண்டிக் கொண்டான். பலனேதும் இல்லை. பழையபடியும், அவள் இந்த அரசியல் சதுரங்க விளையாட்டிலே புகுந்து மனம்போல் ஆடினாள்.

மாவீரன், மாதாவிடம் மட்டற்ற அன்புகொண்டவன். அதற்குச் சான்றாக ஒன்றினைக் கூறலாம். அவன் சென்று, போரிடும் வெஞ்சமரிலே, வெற்றி பெறுவானல்லவா? அந்தச் சமரில் வென்ற அற்புதப் பொருள்களை எல்லாம் அன்னைக்கு, அன்பளிப்பாக அளிப்பானாம்! அத்தகு கருணையுள்ளங்கொண்டவன் கடுமொழி கூறி, தாயின் இதயத்தை சுட வைப்பானா?

அலெக்சாண்டரின் ஆட்சியில், ஆண்டிப்பேட்டர் எனும் அஞ்சா நெஞ்சமும், ஆண்மையும் கொண்ட ஓர் கவர்னர் இருந்தான். இவன், மன்னன் மற்ற நாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம், நாட்டின் நிர்வாகத்தை நன்முறையில் அரசனுக்கு பதிலாக நிர்வகித்து வருவான். இவனுக்கு, மன்னனின் அன்னை அரசியல்விவகாரங்களில் நுழைவது சற்றும் பிடிக்காது.

ஒருசமயம் காவலன் வெஞ்சமர் புரிய வேறுநாடு சென்றிருந்தான். அங்கு சென்றவுடனே, மாதாவுக்கு 'தாயே, தயை செய்து இந்தச் சமயம் நாட்டின் நிர்வாகத்தில் குறுக்கிடாதே' எனக் கேட்டுக்கொண்டு மடல் தீட்டினான். மைந்தனின் பேச்சை பெற்றவள் மதிக்கவில்லை. மாறாக இன்னும் அதி தீவிரமாக ஈடுபட்டாள் அரசியலில்! ஆண்டி பேட்டர் பொறுமை இழந்து, வேந்தனுக்கு அவனுடைய தாய் அனாவசியமாக, நிர்வாகத்தில் ஈடுபட்டுத் தொல்லை தருகிறாள்' எனக்குற்றஞ் சாட்டி ஒரு கடிதம் வரைந்தான். அதற்கு பதிலாக மன்னர் மன்னன், மாதாவைத் திட்டி எழுதி இருப்பான் என்றுதானே, நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை! அது ஓர் அன்பு மகனின், இதயக் குமுறலின், எதிரொலியாகும்! அவன் ஆண்டி பேட்டருக்கு, "ஆண்டி பேட்டர்! நீ அறுநூறு கடிதங்களை, என் அன்னையைப் பற்றித் தூற்றி வரைந்தாலும், என் அன்னையின் ஒரு துளி கண்ணீர் அத்தனை கடிதங்களையும் அழித்து விடுகிறது" என மறுபதில் எழுதினான்.

★

# "பிரிவாற்றுமை"

—[வேலூர்—குழலன்]—

காதலியைப் பிரிந்து காட்டு வழியில் தனி நடை நடந்து, பொருள் சேர்க்கச் செல்லுகின்றான் அவன்.

முகிலைத் தொடும் அகில் மரங்களும், விண்ணை முட்டும் தென்னை மரங்களும், நீண்டு பருத்துப் பல விழுதுகளைக்கொண்ட ஆலமரங்களும், பழுத்துத்தொங்கும் பெரிய பெரிய பழங்களைக்கொண்ட பலா மரங்களும், கொய்யாவும், பிறவும் அந்த காட்டுவழியில் நிறைந்து காணப்பட்டன.

ஒன்றை ஒன்று துரத்தும் பாம்புகளின் கூட்டமும், கட்டிப் புரண்டு சண்டைசெய்து இரத்த துளிகளுடன் காணப்படும் பாம்புகளும் கீரிகளும், முட்களும் கற்களும் நிறைந்து கிடக்கின்றன.

முல்லை மலர்களைக் கொத்துக் கொத்தாகச் சூடியுள்ள முல்லைக் கொடிகளும், பூத்துத் தொங்கும் செண்பக மலர்களை அணிந்துள்ள செண்பக மரங்களும் நிறைந்து மணம் பரப்பிக்கொண்டு இருந்தனவாம்.

அருவிகளில் நிறைந்துள்ள நீலோற்பல மலர்களும், செவ்வாம்பல் மலர்களும், இடையில் ஒற்றைக் காலில் நின்று வாளை மீன்களைக் கொத்தித் தின்னும் வெண் நாரைகளும், கரையில் ஏறி விளையாடும் நீர்நாய்களும், அவைகளைப் பிடிக்கவரும் பருந்துகளும் இன்னும் பலவும் நிறைந்து இருந்தன.

வழி நடப்பவர்கள் இவைகளைக் கண்டு கருத்தை அவைகளிற் பதித்துப் பயணத்தின அலுப்பை மறந்து நடப்பராம்.

ஆனால், அவனோ வேதனை ரேகை படர்ந்த முகமும், துன்பம் உமிழும் கண்களும், சோர்ந்தநடையும், தளர்ந்த உடலும்கொண்டு, அடிக்கு அடி நிற்பதும் பிறகு நடப்பதுமாக இருந்தான்.

அழகிய மயில் ஒன்று தன் தோகையை விரித்து களிநடம் புரிந்துகொண்டு இருப்பதை அவன் கண்டான்.

அந்த மயிலின் மினுமினுப்பும் பளபளப்பும் அதன் இறகுகளில் காணப்படும் வர்ண ஜாலங்களின் கூட்டும் அவன் கண்ணைப் பிளந்து கருத்தில் பதிந்தன.

அந்த மயிலின் ஆடல் கண்டதும் அவன் உள்ளம் "பக்" என்றது, கண்கள் 'குரு' குரு!" என்று விழித்தது, உடல் பர! பர! வென்று துடித்தது.

காரணம்?

அந்த மயிலின் ஆட்டம்!

தன் காதலியிடம் பிணக்குக் கொண்டு துள்ளி ஓடும்போது காணப்படும் அவள் கால்களின் துடிப்பு இந்த மயிலின் ஆட்டத்தை அப்படியே ஒத்து இருந்தது.

அதுமட்டுமா?

இந்த மயிலின் சாயல் தன் காதலியின் சாயலைப் பொருந்தி இருப்பதையும் கண்டவுடன், அவன் உள்ளம் தன் காதலியை நினைக்கத் தொடங்கியது.

ஆசைக் கண்ணாளன் தன்னைப் பிரிந்து பொருள்தேடக் காட்டு வழியில் தனிநடை நடக்கின்றானே, அவனுக்கு எவ்விதமான தீங்கும் அண்டக் கூடாதே என்று அவள் நினைந்து நினைந்து உருகுவதைபோல், அவன் நினைந்தனன்.

அவன் கண்கள் கலங்கின.

அசைவற்று நின்றான்.

அச்சமயத்தில் அவன் மீது முட்டி மோதிக்கொண்டு மான்கள் நடந்தன.

அந்த அதிர்ச்சியில் விழித்தான், கண்டான் மான்களை.

அல்ல! அல்ல! அதன் விழிகளை.

கொண்டான் மறு அதிர்ச்சியை.

அடே! காதலியின் துரு! துரு! வென்ற கண்ணின் பார்வை இங்கு எப்படி வந்தது. அவளதான் மயிலாகவும் மானாகவும் வந்து தன்னை ஏய்க்கிறாள்போல் உள்ளது என்று எண்ணி அதைப் பிடிக்க நடந்தான்.

ஆனால்!

தன் காதலியின் இனிமையான குரல் அவன் காதில் கேட்டது.

திடுக்கிட்டான்! நின்றான்! திரும்பினான்.

அங்கு அவன் கண்டது என்ன?

பாடும் குயில்!

ஆம்! அவன் அந்தக் குயிலின் இனிமையான குரலைக் கேட்டுத் தான் தன்காதலியின் குரலென்று மயங்கினான்.

சீ! சீ! எல்லாம் வெறும் பித்தலாட்டம். அவளையே உள்ளம் எண்ணிக்கொண்டு இருப்பதால் தோன்றும் பிரமை.

இனிமேல் அவளை நினைக்கக் கூடாது. நன்றாகப் பொருள்சேர்த்துக்கொண்டு சென்று அவளுக்குக் காட்டி மகிழவேண்டும் என்று உள்ளம் துணியக் கால்கள் வேகமாக நடந்தன.

பொன்னும் மணியும், முத்தும் மாணிக்கமும் சேர்த்து, சந்தனக் கட்டிலில் உட்காரவைத்து, முத்து மாலையை மாட்டி, முல்லை மலர் தனைக் சூட்டி, கட்டி அணைத்து அவள் பவள உதட்டில் ஆயிரம் முத்தங்களை ஈந்து மகிழும் அந்த நாளை நினைந்து அவன் உள்ளம் களிநடம் புரிந்தது.

கால்கள் மறுபடியும் நடக்க சக்தி அற்று நின்று இருப்பதைக் கண்டான்.

அவன் வெட்கப்பட்டான்; இனிமேல் வேகமாக நடக்க வேண்டுமென்று எண்ணி வேகமாக நடந்தான்.

தன் காதலியை இப்பொழுது மறக்க எண்ணிச் சுற்றுப்புற இயற்கை அழகில் தன் உள்ளத்தை பறிகொடுத்து நடந்தான்,

அச்சமயத்தில் அங்கு ஒரு அருவியின் ஓரம் அழகிய வெண்மை நிறம் பொருந்திய அன்னங்கள் சில நடப்பதைக் கண்டான்.

அவன் உள்ளம் திடுக்கிட்டது.

தன் காதலியின் நடையும் அந்த அன்னத்தின் நடையும் ஒத்து இருப்பதைக் கண்டதும் அவன்மனம் பழையபடி காதலியை நினைக்கத் தொடங்கியது.

முதலில் அவன் உள்ளத்தில் தன் காதலியின் கண்கள் இரண்டு தென்பட்டன.

அந்தக் கண்கள் கருவண்டோ? அல்லது வேற்படையோ? இப்படி ஒரு சந்தேகம்.

கருவண்டின் பளபளப்பும் வேலின் கூர்மையும் ஒத்து இருப்பதையும், ஆயினும் ஆடவரை நோக்கும்போது அவள் கண்கள் வேலின் கூர்மையைவிட அதிகமான கூர்மையுடன் ஆண்களைத் தாக்குவதையும் உணர்ந்து இது வேற்படைதான் என்று துணிந்தான்.

இப்படி அவள் எழிலில் மறுபடியும் மூழ்கி நடப்பதையும் மறந்தோம் என்று உணர்ந்து அவன் வெட்கப்பட்டான்.

அவன் உள்ளத்துக்குக் கூறுகின்றான், இப்படி கண்டவைகளுக்கெல்லாம் தன் காதலியை ஒப்பிட்டு ஒப்பிட்டு, மனம் அவளை எண்ணிப்புண்பட்டு, நடப்பதையும் தவிர்த்து இப்படி நடுக் காட்டில் அவதிப்படுவதைவிட அவளைச் சென்று அடைவதே மேல்போல் உள்ளதே என்று.

மயில்கண்டால் மயிலுக்கே
  வருந்திட ஆங்கே
மான்கண்டால் மானுக்கே
  வாடி மாதர்
குயில்கண்டால் குயிலுக்கே
  குழைதி யாகில்
பொருள்வயன்போக் கொழிநெஞ்சே
  கொழுங்கண் என்னும்
அயல்கொண்ட படையாரை
  அன்னப் பேடும்
அதிசயிக்கும் நடையாளை
  அணையல் உற்றே.

இது "நந்திக்கலம்பகத்தில்" காணப்படும் ஒரு அழகு மிக்க மயக்கம் பொருந்திய காதலனின் வேதனைக் காட்சியை விளக்கும் பாட்டு.

★

# சொல்

[அன்பு]

நம் எண்ணத்தைப் பிறருக்கு ஒலி வடிவில் அறிவிக்கும் மொழியே சொல் என்பது. சொல் சாதனமேயன்றி இலட்சியமன்று. கருத்தைக் கூறுவதே நம் நோக்கம். அதற்குரிய சாதனமே சொல்.

நாம் சொல்லும் சொல் நா அசைவதன்மூலம் உண்டாகிறது. ஆகவே நாம் பேசுவதற்கு மூல காரணம் எண்ணம், அதை ஒலி வடிவில் அறிவிப்பது நா.

நாம் சொல்லும் சொல் வன்மையுடையதாக இருக்க வேண்டும். அதேபோது பிறரைப் புண்படுத்தாமல் இருக்கவேண்டும். "வாள் தரும் புண்ணினும் நா தரும் புண்ணே கொடியது."

சொல்லம்பு பட்டபுண் மறையாது' இதனாலேயே வள்ளுவர்.

யாகாவா ராயினும்
  நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்
  பட்டு.

என்று, சுருங்கிய சொல்லால் விரித்துக் கூறினார்.

சொல்லும் சொல் பயனுள்ளதாக இருக்கவேண்டும். அறிவுடையோர் பயனில்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்கள். அவர்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு சொல்லிலும் அவர்களது அறிவின் திட்பம் வெளிப்படும். பயனில்லாத சொற்களைக் கூறுபவனை மனிதன் என்றே சொல்லக்கூடாது. மனிதப் பதர் என்று கூறவேண்டும் என்று கூறிய வள்ளுவர்.

சொல்லுக சொல்லிற்
  பயனுடைய, சொல்லற்க
சொல்லிற் பயனில்லாச்
  சொல்

என்று சொல்லின் இலக்கணத்தை வரையறுக்கிறார்.

சொல்லுகின்ற சொல் இனிய சொல்லாக இருக்கவேண்டும். "இன்சொல் பேசுவதால் நாக்கு காயமுறுவதில்லையே?" என்று இன்சொல் பேச அஞ்சுபவர்களை நோக்கி ஓர் அறிஞர் கேட்கிறார்!

ஒரு மனிதனை நாம் மதிப்பிடுவதே அவனுடைய சொல்லின் மூலம்தான்.

பானை நிறலா அன்று? ஒலியால் அறியலாம். அறிவாளியா அறிவிலியா? பேச்சால் அறியலாம்.

சொற்களை நாம் அளந்து உபயோகிக்க வேண்டும். கூடுமான வரையில் சுருங்கிய சொல்லால் விரிந்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வேண்டும். அதிகப் பேச்சு அறிவுச் சூன்யத்தையே காட்டும் என்பது ஒரு பழமொழி.

இதுபோலவே நாம் உபயோகிக்கும் சொல் பொருளுடையதாக இருக்கவேண்டும். மொழிகள் என்பவை அறிவு உபயோகிக்கும் நாணயங்களேயாகும். சர்க்காரிடத்தில் பொருளில்லையெனில் நாணயங்கள் செலாவணியாகா. அதுபோல் பொருளில்லாத மொழிகளும் பயன்படா. அறிஞர் சில மொழிகளில் பல கூறிவிடுவர், மூடர் பல மொழிகளில் சிலவே கூறுவர்.

நாம் பேசுவதைவிடக் கேட்பதுதான் அதிகமாயிருக்க வேண்டும். அதற்கு சாதனம் மௌனம் ஒன்றே. மௌனத்தின் மூலம் நம் குறைகளை மறைக்க முடியும். பிறர் குறைகளை அறிய முடியும். இரண்டு காதிருந்தும் ஒரு நாவே நமக்கு இருக்கிறது. இதன் மூலம் நாம் என்ன அறியவேண்டும்? நாம் பேசுவதைவிடக் கேட்பதே அதிகமாயிருக்க வேண்டும். நாம சொல்லாத சொல் உறையிலுள்ள வாள். பேசிவிட்டால் வாளைப் பிறன் கையில் கொடுத்தது போலாகும். சொல்லாத சொல் நம்மை ஒருநாளும் தீங்கு செய்வதில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் பணி

ஒரு நாட்டின் எதிர்கால வாழ்வு வளம் கொழிப்பதாகவோ அன்றி வறுமைமீதுற்றதாகவோ ஆவது அந்நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய மாணவர்களால் என்பதை நாம் நன்கறிவோம். ஆனால் அம்மாணவச் செல்வங்களைப் படைத்தளிக்கும் பொறுப்பினர் யார்? ஆசிரியரன்றோ! எல்லா வகையிலும் துவண்டுகொடுக்கும் தன்மையது சிறுவர் உள்ளம்: அத்தகு இளம் உள்ளங்களைச் செம்மை நிறைந்த பாங்கில் பக்குவப்படுத்தி நாட்டிற்கு நல்லபணி செய்ய, உலகம் நல்வழிப்போந்து உய்ய, மன்பதைக்கு உதவுவோர்கள் ஆசிரியச் சான்றோர்கள் என்பதை நாம் நெஞ்சார உணர வேண்டும். ஒரு நாட்டில், ஒரு நூற்றாண்டில் வாழும் மக்கள் உள்ள நிலை, அதுபோகும்போக்கு, அதனால் ஏற்பட்ட விளைவுகள், பொதுவாக அந்நாட்டின் நிலை ஆகியவை அதற்கு முந்திய நூற்றாண்டில் அப்பொழுதைய ஆசிரியர்கள் நல்கிய பணியினைப் பொறுத்தனவாம்.

இல்லத்தில் தாயன்பு உண்டு திளைத்த சிறுமகவு, வயது வந்ததும் கல்வி பயிலப் பள்ளிக்குச் செல்கின்றது. தாயன்பு ஒரு மகவிற்கு எங்ஙனம் இன்றியமையாததோ, எவ்வளவு எண்ணரிய வளஞ் சொரிந்து பயன்விளைக்கின்றதோ, அதுபோன்றதே பள்ளியில் அச்சிறுவனுக்கு ஆசிரியர் அன்பு. அவரது அன்பினைப் பயிருக்கு மழை எவ்வாறோ அவ்வாறென மொழியலாம். தாயினும் அன்பு செய்வோர் உலகினில் எவருமில்லை; அவள் அன்புத் தேக்கம். ஆனால் பள்ளியில் அதே அளவான, தரமான அன்பைப் பொழிய முயற்சிக்கின்றார் ஆசிரியர்.

பயிற்றுவதின் நுண்மையுணர்ந்து தெளிந்த ஆசிரிய நல்லார், பயிற்றுங்கால் தன்னை ஒரு தாயாக ஆக்கிக்கொள்ளுகின்றார். தன் முன்னிருக்கும் மாணவனைத் தாய் நோக்குமாறு போல நோக்குகின்றார். அந்நோக்கின் பயனாய்த் தன்னிலை முற்றிலுந் திரிந்து கண்களில் தாயருள் சுரக்க நா அன்புச் சொற்கள் பொழிய, கைகள் அணைக்கும்வழி நீள, பாடங்களைத் தெளிவுற விளக்குகின்றார். அந்நிலையில் அச்சிறுவன் செய்பிழைகள் புல்லெனப் படுகின்றன;

**ந. கோவிந்தன்**

சினஞ் சிறிதுங்கொள்ளாது, பல தடவை சொல்லவேண்டியிருப்பினும் தயங்காது சொல்லிப் புகட்டுஞ் செவ்வியபாங்கு உன்னி உன்னி வியக்கற்பாலது! மாணவனும் அவர்காட்டும் அன்பிலே மயங்கி, பன்னிப் பன்னித் தெளிவுறப் புகன்றிடும் பாடங்களில் கருத்தினை நிறுத்தி, தாயிடம் உணவுகொள்தலைப்போல ஆசிரியர் தரும் அறிவுணவை உண்ணுகின்றான். தாய் மகவிற்கு அன்புடன் சோறூட்டுங்கால், அம்மகவு அடம்பிடித்திடின் சினங்கொள்ளாது, “கண்ணே! தமிழே, மணியே!” என்று அன்புற அழைத்து, மதிமுகங்காட்டி, காக்கையைக் கூவி, கிளியினைக் கூட்டித் தான் கொண்ட பணி நிறைவு பெற இயற்கையைத் துணைக்கழைப்பாள்; குழவியின் சிந்தை இனிய காட்சிகளில் பதியுங்கால் சிறிது சிறிதாக உணவினை ஊட்டிவிடுவாள். அதுபோன்று ஆசிரியர் சிறுவன் உள்ளத்திற்கியைந்த எழில்தரு மேற்கோள் காட்டி, மாணவனின் எண்ணத்தையும் மேற்கோள்களில் நிலைக்கவிட்டு, அம்மேற்கோள்வழி அறிவுக் கருத்துக்களை உள்ளத்தில் செலுத்துகின்றார். குழைசோறு முழுதும் ஊட்டிய நிலையிலே குழவியின் சிறு வயிற்றைத் தடவி, எழில் வழி விழிகளைக்கண்டு, குழியிடுங் கன்னத்தைச் சுவைத்துத் தாயுள்ளம் எவ்வளவு உவக்குமோ, அவ்வண்ணமாக ஆசிரியர் தான் புகட்டி முடித்த அறிவுக் கருத்துக்களை அம்மாணவன் திரும்பச் சொல்லக்கேட்டு, தான் விளக்கியவெல்லாம் அவன் உள்ளத்தில் பதிந்துவிட்டன என்றறிந்ததும் உள்ளம் மகிழ்வினால் விம்மிப் பொங்க, உடலெல்லாம் உவகை மேலீட்டால் மயிர்க்கூச்செரிய அன்போடு தட்டிக்கொடுத்து மாணவனது நினைவு நலத்தைச் சுவைக்கின்றார்; அதன் வழி அவனுக்கு ஊக்கமூட்டுகின்றார். அந்தப் பொழுதினில் ஆசிரியர் பார்வையும் மாணவன் பார்வையும் கலந்து இருவரது உள்ளத்திலும் அன்பினைப் பாய்ச்சுகின்றன. மாணவனின் அன்புப்பார்வை ஆசிரியர் உள்ளத்தே பாய்ந்து தனியான ஒரு அன்பை, சிறப்பான ஒரு பற்றுதலைத் துளிர்க்கச் செய்கின்றது! ஆசிரியரின் அருள் நிறை அன்புப் பார்வையினை மாணவனின் உள்ளந்தாங்கமாட்டாது நிறைந்து தணிகின்றது.

அந்நிலையில்தான் பணிவென்னும் ஒழுக்கத்தின் அச்சாணி உருப் பெறுகின்றது. ஆசிரியரிடம் பணிவாக நடக்கவேண்டுமென்று சொல்லக்கேட்ட மாணவன், இந்நிலையில்தான் பணிவுணர்வைத் தானாகத் தன்பாங்கில் பெறுகின்றான். அப்பணிவின் மாண்புதான் என்னே! அந்தப் பணிவுதான், ஆசிரியரின் பழுதற்ற அன்பும், அருளும் நல்ல பொறுப்புணர்வும் ஒன்றி, ஈன்று தந்த பணிவுதான் ஆசிரியர் மாணவர் கூட்டுறவை வளர்க்கின்றது. அக் கூட்டுறவு வலுவில் குன்றம்; வளத்தில் மருதம்; வண்மையில் பாரி தன் உள்ளம் என இயம்பற்பாலது. இதுதான் ஆசிரியர் மாணவர் நற்றொடர்பின் நுட்பம்.

பொறுமைதனில் தாய் முதல்வள் என்றால், ஆசிரியர் இரண்டாவது. குறும்பும் தவறும் அளவு மீறின் ஆசிரியர் கடிந்து கொள்ளத்தான்செய்வார். ஆனால் அவர் கடிந்துகொள்ளும் முறை சேயினைத் தாய் கடிந்து கொள்வதுபோல்வதே! தவறுகள் நிறைந்துவிடின் தறுதலையாவது ஒரு தலை. தன் மகனைச் சான்றோன் என்று கேட்கத்தானே ஒரு தாய் உள்ளம் விழையும்; தன் மாணவன் எதிர்காலச் சமுதாயத்திற்கு அருந்தொண்டாற்றும் அறிஞனாகத் திகழ வேண்டுமென்றுதானே ஒவ்வொரு ஆசிரியரும் அவாவுவர். ஆகவே குற்றஞ் செய்யுங்காலை கண்டித்துத் திருத்துவது ஆசிரியரின் அரும் பொறுப்பாகின்றது. அப்பொறுப்பு தனக்கல்லாது மாணவனின் நன்மைக்கே; மேலும் அது இன்றியமையாததாகும்.

நிலத்தினை உழுது பண்படுத்தி, பொறுக்கி விதைகளை விதைத்து, நீர்பாய்ச்சி, களையெடுத்து, செழிப்புற வளர்த்து பயனீட்டி இப்பாருக்கு அளிக்கும் உழவனைப் போன்றவர் ஆசிரியர்! ஆசிரியரைச் சமுதாய உழவன் எனல் சாலப் பொருத்தமாகும். உழவன் உழைப்பை நுகர்வது உலகம், மக்கள். இளம் உள்ளங்களை அறியாமையென்னும் கனல் கருக்கி விடாமல், அன்பு கொண்டு பண்படுத்தி, ஒழுக்கமெனும் உரமிட்டு அறிவு விதைத்து; ஒன்றுக்கு நூறாகப் பயன்தரச் செய்பவர் ஆசிரியர். அந்தப் பயனை நுகர்வது மன்பதை, சமுதாயம். எனவே உழவனும், ஆசிரியரும் சமுதாயத் தொண்டர்கள். உழவினால் உலகம் வலுவுற்று இயங்குகின்றது என்பதை நாம் அறிவோம். ஆனால் அவ்வியக்கம் நேர் வழிப்பட்டு, அன்பு வழிப்பட்டு, அறிவு வழிப்பட்டு இயங்குவது ஆசிரிய நல்லாரால் என்ற பேருண்மையை நாம் மறந்து அவர்தம் இழிவு நிலை களைய முனையாதது ஏனோ? குற்றமெனும் இருள் நீக்கித் தெற்றமெனுந் தெளிவு தருதலாலேயே — அறிவொளி நல்குதலாலேயே ஆசிரியர் என்ற அருந்தமிழ்ப் பெயரிட்டழைத்தனர் தமிழ் மாந்தர். (ஆசு. குற்றம், மாசு; இரியர் போக்குவோர்) ஆசிரியத் தொண்டு செய்வோரினும் விரிந்து பரந்த உள்ளங்கொண்டோர் புவிதனில் யாருமில்லை; இருக்க முடியாது. ஆசிரியரைத் தெய்வம் என்று நாம் அழைத்து மகிழ்வது இந்தப் பொருளில் தான். ஆசிரியர் சமுதாயத்தின் சிற்பி; பொதுநலத் தொண்டர்; அன்பின் மாட்சியுணர்ந்த அண்ணல். பள்ளி மாணவர்களே தன் மக்கள், அவர்களின் இன்ப துன்பங்களே தன் இன்ப துன்பங்கள் என்று இயங்குபவர். தன் வீடு, மனைவி என்ற எண்ணமே எழுவதில்லை! அவ்வெண்ணந் துறந்த துறவிகள் அவர்கள்.

அவ்வாறு எல்லாவற்றையுந் துறந்தஅருளாளர்களின நிலையை இன்றையத் தமிழகத்தில் காணுவோமவாரீர்! ஐயகோ! கொடுநிலை! கொடுநிலை பாரீர்! வறுமைப் பேய் பிடித்து ஆட்டி அலைக்கழிக்கின்றது அவர்களை! தங்களின வாழ்வுத் தேவைகளை நிரப்பிக்கொள்ள வழியின்றி மிடிப்புற்று வாடிய முகத்துடன் நடமாடுகின்றனர்; அந்த நடமாட்டத்தில் உயிரில்லை. வறுமைப் பிணியால் துன்புற்றுழலும் ஆசிரியர் உலகு அருமையான சமுதாயத்தை உருவாக்க எங்ஙனம் இயலும்? ஊழியம் செய்யவேண்டும் உலகளவு; ஊதியம் பெறவேண்டும் கடுகளவு என்னும் போக்கு எவ்வாறு நேர்மையின்பால் படும்? பகலவனின் திறம் விளக்கும் பாலை நிலத்தின் கண், வேலிக்கு ஆயிரங் கலம் விளைவிக்க எண்ணினனும் ஒரு மேதாவி! ஆட்சிப் பீடங்களில் அமர்ந்திருப்போர்தம் போக்கு இதைப் போன்றதே! ஆசிரியர் பணியை வானளாவப் புகழுகின்றனர். எல்லையே இல்லை அவர்கள் பணியின் மாட்சிக்கு என்கின்றனர்! ஆனால் அவர்தம் இழிநிலை நீக்க ஏதாவது உருப்படியான நடவடிக்கை எடுத்திருக்கின்றனரா? இல்லையே! பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தின் நிலையேஇதுதான். அவர்கள் தினிபோடாது கறக்க நினைக்கின்றனர். அதன் முடிவு அம்மாட்டின் இறுதிக் காலம் நெருங்குகிறதென்பதே! அதன் விளைவு அப்பசு வழங்கிய இனிய தீம்பாலின் பயனையே இழப்பதாகும்.

உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில், செழித்துக் கொழித்த நிலையில் இலங்கும் நாடுகளில் ஆசிரியர்நிலை எவ்வாறிருக்கிறது? நம் நாட்டினின்றும் அந்நாடுகள் போந்து மீண்ட நல்லறிவாளர்களின் அறிவுதுலங்கு சொற்பொழிவுகள் இதற்கு விடை கூறும். "ஆசிரியர் நிலை அந்நாடுகளில் சாலச் சிறப்புற்றிருக்கிறது. அங்குள்ள ஆட்சிப் பொறுப்பாளர் எல்லாம், தங்கள் தங்கள் நாட்டின் வாழ்வும் வளமும், வீழ்வும் வறுமையும் ஆசிரியர் பணியுடன் பேரளவில் தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து, ஆசிரியர் நிலையில் கவனஞ் செலுத்திக் கல்வித் துறைக்காக நிறையச் செலவு செய்கின்றார்கள். ஆசிரியர் வாழ்வின் அளவினையும் தரத்தினையும் ஒத்ததுதான், கல்வியின் அளவும் தரமும். கல்வியின் நிலையை ஒத்துத்தான் நாட்டின் முன்னேற்றத்தின் வலுவும் செழிப்பும் என்ற உண்மையை அவர்கள் உள்ளத் திருத்தி அதன் வழி இயங்குகிறார்கள்" இது அவர்களின் உரைகளினின்றும் நாம் பெறும் செய்தியாகும்.

இவ்வாறு எண்ணிச் செயல்படும் நாடுகளின் கல்வி வளத்தில் எங்ஙனம் குறை இருக்கும்? வளமான வாழ்வு நுகரும் ஆசிரியர்கள் மாணவர்கட்கு அறிவு கொளுத்துகிறார்கள்; கருத்துக்கள் பூக்கின்றன; கலைகள் பெருகுகின்றன! ஆராய்ச்சி அறிவு செம்மையுற்றுச் சிறக்கிறது; அதனால் விளையும் பயன் சிறிதோ! புதுப் புதுக் கண்டுபிடிப்புக்கள் பல்கிப் பெருகுகின்றன. மக்களின் வாழ்வுநிலை உயர்கின்றது. மக்கள்

மக்களாக வாழும் நீர்மை மொட்டவிழ்க்கின்றது. அந்நாடு வள நாடாகின்றது. உண்டது போகக் கண்டதைப் பிற நாடுகட்குக் கொடுத்துதவும் மேம்பாடு பெற்றுத் திகழ்கிறது. பொருளியல் துறை, அறிவியல் துறை, அரசியல் துறை என எல்லாத் துறைகளிலும் தன்னிறை பெற்று வழியும் அந்நாடு, அத்துறைகளில் பின்தங்கிய நாடுகட்குக் கைம்மாறு செய்ய முன்வருகிறது. இவ்வாறு தானும் உயர்ந்து பிறரையும் உயர்த்தும் அளவிற்கு அது பெற்றிருக்கும் வளம் ஆசிரியர் பணியால் இயன்றதே யெனல் பொருந்தச் சொல்லினதாகும்.

இன்றையத் தமிழகம் அதன் சங்க கால நிலையுடன் ஒப்பிடுங்கால் மடுவிற்கும் மலைக்கும் உள்ள உறவினதாகத் தென்படுகிறது. ஏதாவது இக்காலத்தில் நல்லவை காணப்படுகின்றனவெனின், அது காலமென்னும் கொடும்புயலுக்குத் தப்பிய மரவேர்களினின்றும் துளிர்விட்ட கொழுந்துகளாகும். ஆனால் அவ்வாறு துளிர்ப்பதற்கு இயற்கையின் தண்ணருளாம் மழை எங்ஙனம் இன்றியமையாததோ அதுபோல மாண்ட தமிழகப் பண்பாட்டின் சிறு சிறு சிதறல்கள் காணப்படுவதற்கு காரணமாவார் தமிழக ஆசிரியர்கள். அவர்களின் சலியாத உழைப்பே பெருமுயற்சியின் விளைவே நாம் நன்னிலை காணலாம் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

ஆசிரியர் யார்? அவர்கள் உழைப்பினால் கிட்டும் பயன் எவ்வளவு? அது எங்ஙனம் இன்றியமையாதது? அவர்களின் உழைப்பு எந்தெந்த நிலைகளினின்றும் அரும்பி மலர்கின்றது? அந்த மலர் சமுதாயமென்னும் இளநங்கையின் கூந்தலைச் சார்ந்து, இன்மணம் பரப்பி, அவள் அழகினைக் கூட்டிப் பண்பாடென்னும் கட்டழகனின் உள்ளத்தை எவ்வண்ணம் கொள்ளை கொள்கிறது? ஆனால் அவ்வின்றியமையாப் பணியாற்றும் தொண்டர்களின் நிலையென்ன? இந்நிலை நீடித்தால் தமிழகம் ஈடேறுமா? நாம் காண, தணியா வேட்கை கொண்டிருக்கும் சங்கத் தமிழ்ச் சமுதாயம் உருவாகுமா? அடித்தளம் வலுவாக அமைக்கப்பெற்ற கட்டிடமே உறுதியுடன் நீண்டகாலம் நிலைபெற்றிருக்கும்! அவ்வடித்தளம் போன்றதே ஆசிரியர் பணி.

இனி, அரசினர் கடமையென்ன? தமிழகத்தின் நலனில் நாட்டங் கொண்ட பேரறிஞர் பலரும் பல்வேறு வழிகளில் "ஆசிரியர் சமுதாயம் உயரவேண்டும். அதன் வாழ்க்கை வசதிகளும், வாழ்வுத் தேவைகளும் நிறைகொள வழங்கப் பெறுதல் வேண்டும். ஆட்சியாளர்கள் நாட்டின் நிலையை நன்குணர்ந்து ஆசிரியர் நிலையைத் தெளிவாகக் கருத்திற்கொண்டு உருப்படியான திட்டங்கள் போட்டு, ஆசிரியர் நலனில் உள்ளம் ஒன்றிய அக்கறை கொண்டு நிறைவேற்ற முயலவேண்டும். தங்களின் பொறுப்பை உணர்ந்து பாடுபட வேண்டும்" என்று நயந்தும், கண்டித்தும் எடுத்துரைத்து வரும் சொற்களுக்கு அரசினர் மதிப்புத் தரல் இன்றியமையாததாகும். கல்வித் துறைக்கு நிறையப் பணம் ஒதுக்கவேண்டும். ஆசிரியர் உள்ளம் ஒடிந்துவிட்டால் அரசினர் எதிர்பார்க்கும் அளவு நாட்டில் முன்னேற்றம் இராது. "ஆசிரியர் தொழிலைப் போல, அரசாங்கத்தால் கேவலமாக நடத்தப்பெறும் தொழில் வேறு எதிலுமில்லை" என எனது பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்பொழுது அதுபற்றி ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அது எவ்வளவு உண்மையென்பதை நான் இப்பொழுது உணர்கிறேன். அவரது சொல் பல தடவை தங்கள் இழி நிலைபற்றி அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி, தங்கள் நிலை உயர உதவிகோரித் தீர்மானங்கள் நிறைவேற்றி, ஒருமுறையேனும் தங்களின்பால் அவ்வருளாளர்களின் கடைக்கண் பார்வை விழும் என்று நம்பி, அந்நம்பிக்கை ஈடேறாமையால் வருத்தமேலீட்டு ஏங்கி ஏங்கி வெளிப்பட்ட பெருமூச்சின் விளக்கமேயல்லாது வேறென்ன?

ஆயினமையின், மக்களுடைய அரசாங்கம் என முழங்கும் ஆட்சியாளர்கள் மக்களின் ஒருபகுதியினராக, மக்களின் நாகரிகத்தினை உருவாக்கும் ஆசிரியர்களின் நலனில் நாட்டங்கொண்டு விரைவாக விரிவாகத் திட்டமியற்றி ஆசிரியர் நிலை உயர்த்த முனையவேண்டும். மக்கள் தலைவர்களாக இருக்கும் அறிஞர் பெருமக்களின் வேண்டுகோள்களைப் புறக்கணியாது ஏற்றுக்கொண்டு சீர்படுத்த முயலவேண்டும். நமது மாநில கல்வித் துறை யமைச்சர் திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் இதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, வீணாக விரயமாகும் தொகையையாவது தடுத்து எடுத்து ஓரளவாவது பயன்பெறப் பாடுபட்டால் ஆசிரியர் உலகே அவரைப் போற்றும்.

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

மேற் கூறிய அத்தனை இலக்கணங்களோடும், கேட்டார் பிணிக்கும் பண்புகளோடும், கேளாதவரும் கேட்க விரும்பும் ஆற்றலோடும் கூறப்படுவதே சொல்வன்மை என்பது. திறனறிந்த சொல்லைச் சொல்லுதலைவிட அறமும் பொருளும் சிறந்ததல்ல என்கிறார் வள்ளுவர்! இவ்வாறு சொல்வன்மைமிக்க நாவலர்களைச் சரித்திரம் பல இடங்களில் கண்டிருக்கிறது.

நாவன்மை ஒருவனுக்கு இல்லாதிருத்தல் அவனுக்கு பெரிய இழப்பாகும். நா தான் மனிதனிடமுள்ள நல்ல அம்சம். கெட்ட அம்சமும் அதுவேதான். நாம் நாவின வசமானால் அதைவிடத் தீய பொருளில்லை. அது நம்வசமானால் அதைவிட உயர்ந்த பொருளில்லை.

ஒருவனுக்கு அமைந்திருக்கும் நலங்களிலெல்லாம் நா நலமே சிறந்தது, அத்தகையவனே சொல்வன்மையுடையவன். என்பது வள்ளுவர் கருத்து. வில்லை ஏராக உடைய உழவராகிய வீரருடன் பகைகொண்டாலும் கொள்ளலாம். சொல்லை ஏராக உடைய உழவராகிய அறிஞருடன் பகை கொள்ளக் கூடாது, என்று சொல்வன்மையுடையாரின் திறமையைப்பற்றி புகழ்ந்து கூறி, அது அற்றவர்களை எச்சரிக்கிறார் வள்ளுவர்.

வில்லேருழவர் பகை
கொள்ளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை.

★

# 123-5: ஒரு வேதனைக்கதை!

பணமில்லை! பணமில்லை!'—என்கிற பல்லவி, காங்கிரஸ் பீடமேறிய நாள் முதல் இன்றுவரை கேட்கப்படுகிறது.

பணமில்லை! பரதவிக்கிறோம்!! — என்று உள்நாட்டில் சொல்வது மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கும் போய், டில்லியினர் ஓலமிடுகின்றனர், திருவோடு தூக்கிக் கெஞ்சுகின்றனர்.

அமெரிக்கா உதவுமா, ருசியா ஏதாவது தருமா, ஜெர்மனி கடன் கொடுக்குமா, ஜப்பான் நல்ல மனது வைக்குமா, என்று ஒவ்வொரு நாட்டையும் அண்ணாந்து பார்க்கிறார்கள் — ஆலாய்ப் பறக்கிறார்கள்.

"என்ன செய்யுமய்யா நேரு சர்க்கார்? மக்களுக்கு எவ்வளவோ செய்யவேண்டுமென்றுதான் நேருவும் படாதபாடுபடுகிறார். அணைக்கட்டுகள் இல்லை, ஆலைகள் இல்லை என்று இந்த தி. மு. க. - வினர் அலறுகிறார்களே. இது எங்கள், மனித குல மாணிக்கமாம் நேருவுக்கு மட்டும் தெரியாதா என்று நினைக்கிறீர்கள்? தெரியும். தெரிந்து என்ன செய்வது? பணமில்லையே!!", என்று பரிதாபச் சிந்து பாடுவோரும் உண்டு.

பணமில்லை!—என்கிற பரிதாப நிலையை நாமும் மறுக்கவில்லை. டில்லி பீடத்திடம், போட்ட திட்டங்களை நிறைவேற்றக்கூடிய அளவுக்குப் பணமில்லாமலிருக்கலாம்.

பணமில்லாதபோது என்ன செய்யவேண்டும்? — "எமக்குத் தெரியாதா! செலவைக் குறைக்க வேண்டும். இதை உணர்ந்ததால் தான், எமது அகில உலக சோதி, சமாதானக் காவலர், சாந்த சீலர் நேரு, செலவைக் குறைக்கவேண்டும் என்று தினம் தினம் சுற்றறிக்கைகள் அனுப்புகிறார். மந்திரிகள் வசிக்கும் வீடுகளில் அதிகப்படி மின்சாரம் உபயோகிப்பது உள்பட சிக்கனம் செய்யும்படி விடுத்த வேண்டுகோளைக் கவனிக்கவில்லையோ? எங்கெந்த விதங்களில் பணத்தை மிச்சப்படுத்தி, திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ, அந்த வகைகளில் எல்லாம் முயற்சிக்காமலா யிருக்கிறார் நேரு", என்று கேட்போருண்டு.

உண்மைதான்! அடிக்கடி நேரு அவர்கள், சிக்கனச் சிந்து பாடுகிறார்—அப்போதுதான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வேண்டிய பணத்தைத் திரட்ட முடியும் — வெளிநாடுகள் உதவும் என்று எதிர்பார்த்துப் பயனில்லை—தன் கையே தனக்கு உதவி என்று சரமாரியாகப் பேசுகிறார்! சண்டமாருதமெனக் கர்ச்சிக்கிறார்!!

**இதோ ஒரு செய்தி:- 1956-ம் ஆண்டில் ஆயுத தளவாடங்கள் மட்டும் பிரிட்டனிடமிருந்து 47·29 கோடி ரூபாய்களுக்கு வாங்கப்பட்டது.**

47 கோடி ரூபாய்க்கு 1956-ல் ஆயுத தளவாடங்கள் வாங்கப்பட்டதாம்! அதுவும் பிரிட்டனிலிருந்து!!

கோதுமையோ, இயந்திரமோ, துணியோ அல்ல வாங்கப்பட்டது —துப்பாக்கிக் குண்டுகள்! பீரங்கிகள்! போர் விமானங்கள்!!— அதுவும், ஒருகோடி இரண்டு கோடிக்கு அல்ல; 47 கோடி ரூபாய்க்கு!!

ஆயுத உற்பத்தியைக் குறைக்க வேண்டும் —போர் முயற்சிகளில் எந்த நாடும் இறங்கக்கூடாது— சமாதானமே எமது இலட்சியம்—குண்டுகளுக்கு விரயமாக்கும் பணத்தை கோதுமையும் அரிசியும் உற்பத்தியாவதற்குச் செலவழிக்கலாம—மனிதர்களை அழிக்க ஏன் முயல்கிறீர் — வாழ்விக்கப் பாடுபடலாகாதா! என்று, வானதிரப் பேசுகிறவர், நேரு. வண்ணப் புருக்களையும், சமாதானத்துக்கு அறிகுறியாகப் பறக்கவிடுகிறார்.

அகில உலக சமாதான 'நோபெல்' பரிசு யாருக்குக் கொடுக்கப்படலாம் என்று கேட்டபோது, ஸ்வீடனில், நேருவுக்கு அளிக்கப்பட வேண்டும், அதற்குரியவர் அவரே, என்று வெளியிட்டார்களாம். அந்தளவுக்கு, சமாதானம் பற்றி, முழக்கமிட்டு வருகிறார்.

அப்படிப்பட்டவரது சர்க்கார், 47 கோடி ரூபாய்களை, துப்பாக்கிக்கும் பீரங்கிக்கும் கொட்டிக் கொடுத்திருக்கிறது! போர்க் கருவிகள் வாங்க, 47 கோடி ரூபாய்களைப் பிரிட்டனுக்குக் கொடுத்திருக்கிறது!!

"உன் தி. மு. க. வேலையைக் காட்டிவிட்டாயல்லவா? 1956-ம் ஆண்டில் வாங்கியது பற்றி, இப்படி அங்கலாய்க்கிறாயே. 1957 வரவு செலவில், நேரு சர்க்கார், அப்படி ஏதாவது செய்ததாகக் காட்டமுடியுமா? 1956ல் செய்திருக்கலாம்! பிறகு, நிலைமை மோசமானதைக் கண்டு, நிச்சயம் எமது காங்கிரஸ் சர்க்கார் இதுபோன்ற செலவினங்களைத் தவிர்த்திருக்கும். 1957ல் தானே, செலவினங்களில் சிக்கனம் பார்க்கும்படி, தாக்கீதுகளும் நோட்டீசுகளும், அனுப்பினர்", என்று சொல்லக் கூடும்!

தவறு செய்வது மனித இயற்கை! ஆனால், அதைத் தவறென உணர்ந்தபோது, திருத்திக் கொள்ள வேண்டும்—அவன்தான் உண்மையான மனிதன். அதுவும் நாட்டை நிர்வகிக்கும் அரசு, அப்படிச் செய்தால்தான், அரசை நம்பிவாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு நீதியும் சுகமும் மலரச் செய்யமுடியும்.

1956ல் 47 கோடி செலவிட்ட டில்லி, பணமில்லாத நிலைமையில் அடுத்த ஆண்டு, இந்தச் செலவைக் குறைத்திருக்கும் என்றே எதிர்பார்ப்பர்! ஏனெனில், இப்போது இந்திய உபகண்டத்துக்குத் தேவையானது தோட்டாக்களல்ல—சோறு!!

பார்லிமெண்டில் கடந்த 17ந் தேதி டி. சி. எம். மேனன் என்பார், இதுபற்றிக்கேள்வியொன்று கேட்டார். அப்போது, பாதுகாப்பிலாகாவின் உதவிமந்திரியான சர்தார் சுர்ஜித் சிங் என்பார் சொன்னார் — 1956ல் 47 கோடி செலவிட்டோம். உண்மைதான் என்று!!

1957ல் அந்தச் செலவு என்னவாயிற்று? — என்று கேட்டார், உறுப்பினர்! அமைச்சர், கலக்கம் ஏதுமின்றி பதிலளித்தார், அதிகமாயிற்று என்று!!

## விற்பனையாளர்களுக்கு முக்கிய அறிவிப்பு

டிசம்பர் பட்டியல் பாக்கி முழுவதும், மலருக்குரிய தொகையும் 10—1—58 க்குள் அனுப்பாத ஏஜண்டுகளுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி.

*1956ஐ விட 1957ல் அதிகமான குண்டுகளையும், தோட்டாக்களையும், டில்லி சர்க்கார் வாங்கியிருக்கிறார்கள்,பிரிட்டனிடமிருந்து;அதுவும் எவ்வளவு ரூபாய்க்குத் தெரியுமா?* **123-06 கோடி ரூபாய்களுக்கு!!**

**கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு 76 கோடி ரூபாய்க்கு மேல் அதிக ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்! 1956ம் ஆண்டில் 47 கோடியாக இருந்தது, 57ல் 123 கோடியாக உயர்ந்திருக்கிறது!!**

குறைந்திருக்கிறது — என்கிற சொல்லையே, எதிர்பார்ப்பர். ஏனெனில், பணமில்லை, பணமில்லை என்று பாடப்பட்டு வரும் சிந்து, அதிகம். ஆனால்,நேருபண்டிதரின் சர்க்கார், போர்த் தளவாடங்களுக்கென்று 76 கோடியை அதிகமாக்கியிருக்கிறது.

எக்கட்சியினராயினுஞ் சரி, இந்த இடத்தை மட்டும், தயவு செய்து உற்று நோக்கும்படி வேண்டுகிறோம். இவ்வளவு கோடி ரூபாயை ஆயுதத் தளவாடங்களுக்கென கொட்டி அழவேண்டிய அவசியம் என்ன ஆண்டாண்டுதோறும், போன ஆண்டைவிட அதிகமாக்குமளவுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டிருக்கிறது இந்தியாவுக்கு? கோதுமையும் அரிசியும்தானே மக்கள் கேட்கிறார்கள்; அவர்கள் குண்டையும் துப்பாக்கியையுமா கேட்கிறார்கள்!!

**123 கோடி ரூபாய்!**—ஏ, அப்பா!! என்று திடுக்கிட வைக்கிறது, நம்மை. கொஞ்சங்கூட மனம் கூசாமல், நாட்டிலே கண்ணீரும் கம்பலையுமாய் அலையும் மக்களைப் பற்றிய கவலையுமில்லாமல், கொட்டித் தொலைக்கிறார்கள். இந்த இலட்சணத்தில், பணமில்லை, பணமில்லை என்று சொல்லிக்கொண்டு திருவோடு தூக்கிக்கொண்டும் ஓடுகிறார்கள்! 'உம்' மென்று முகத்தை வைத்துக்கொண்டு, ஏமாற்றத்துடன் திரும்பியும் வருகிறார்கள்!!

இன்னொரு செய்தி: திட்டம் வெட்டப்படக்கூடாது என்பதற்காக நிதியமைச்சர் சுப்பிரமணியம் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டார். ஆனால், விவசாய சம்பந்தப்பட்டவை தவிர ஏனைய திட்டங்கள் அனைத்தையும் திட்டக்குழுவினர் வெட்டி விட்டனர்.

போர்த் தளவாடங்களுக்கென 123 கோடி ரூபாய்களை அழிக்கும் டில்லியிலிருந்துதான் இச் செய்தியும் கிடைக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், எதையும் வெட்டக்கூடாது, எங்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டதே கொஞ்சம், ஆகவே அப்படியே நிறைவேற்ற வேண்டும் என்று அண்மையில் டில்லி போயிருந்த நமது சுப்பிரமணியம் கெஞ்சினாராம்; டில்லி பீடம், ஏற்கவில்லையாம்? இதை! மறுத்துவிட்டதாம்!

சுப்பிரமணியம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாநிலத்துக்கு 400-கோடியாவது ஒதுக்க வேண்டும் என்று கேட்டார் முதலில்—400-கேட்டதற்கு, "முடியாது 200-கோடி தருகிறோம்" என்றது டில்லி—பரவாயில்லை என்று சென்னை வந்து சேருவதற்குள் 200-கோடியையும் 176-கோடியாக்கிவிட்டார்கள் என்று செய்தி வந்தது--அந்த 176-கோடியாவது நிலைத்ததா என்றால், கொஞ்ச நாட்களுக்கெல்லாம் 152-கோடியாக்கி விட்டோம் என்று தகவல் வந்தது; இப்போது அந்த 152-கோடியிலும் வெட்டு வந்திருக்கிறது.

**400**
**200**
**176**
**152**

என்கிற இந்த 'தேய் பிறை'க் கணக்கிலேதான் திராவிட நாடு திராவிடருக்கே எனும் முழக்கம் புதைந்து கிடக்கிறது! தென்னாடு, முதல் 5-ஆண்டுத் திட்டத்தில் வஞ்சிக்கப்பட்ட பூமி; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஏதாவதுகிடைக்கும் என்றே 400-கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டினார்கள் சென்னை சர்க்கார். 400-லிருந்து 200-ஆகி, 200-லிருந்து 152-ஆகி, இப்போது இன்னும் வெட்டப்படும் கட்டத்தில் நிற்கிறது!!

**இப்படி டில்லி செய்யும் என்பதால் தான், தேர்தலின்போது — நாம் சொன்னோம்—இரண்டாவது 5-ஆண்டுத் திட்டத்தில் 6000-கோடிபோய் தருவதாக டில்லி வாக்களிக்கட்டும். நாங்கள் தேர்தலில் போட்டியிடாமல் விலகிக்கொள்ளுகிறோம் என்று!**

நாமறிவோம், டில்லியிலிருந்து தென்னாட்டுக்கு எப்போதும், சமநீதி கிடைக்காது என்கிற உண்மையை.

400—200—176—152 என்கிற கணக்கு உரைக்கும் இந்த உண்மையை. இந்த 152-கோடி என்கிற உறுதியைவைத்து, இந்த ஓராண்டுக்கு **35-கோடி** ரூபாய்க்குத் திட்டம் போட்டுக்கொண்டு சென்றிருக்கிறார் நிதியமைச்சர் சுப்பிரமணியம்! இதாவது கிடைக்கட்டும் என்கிற பெருமூச்சோடுதான் அவர் சென்றிருக்க வேண்டும்!!

இந்த 35-கோடி ரூபாயைக் குறைத்துக்கொள்! — என்று டில்லி சொல்லிவிட்டதாம்.

மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டாராம், சுப்பிரமணியம்.

போய்யா, போ! —என்று சொல்லிவிட்டதாம், டில்லி.

வடக்காவது! தெற்காவது!! —என்று இங்கு எக்காளமிடும் நண்பருக்கு, வேதனையும் கண்ணீரும் ஏற்பட்டு இருக்கக்கூடும், டில்லியில்.

**5-கோடி ரூபாய்!** — மிகப்பெரிய தொகையல்ல, டில்லிக்கு! ஆனால் சென்னைக்கு 5-கோடிரூபாய் சாதாரணமான தொகையல்ல!

**ஆண்டுக்கு 123-கோடி ரூபாய் போர்த்தளவாடங்களுக்கு அழிக்க முடியும் டில்லியால்.**

**ஆண்டுக்கு கேவலம் 5-கோடி ரூபாய் கூட சென்னைக்குத் தரமுடியாது டில்லியால்.**

57-ஐ வெகுசுலபமாக 123-ஆக்க முடியும் டில்லியால்! 35-ஐ 40-ஆக்க மனம் வராது, 30-ஆக்குவதென்றால் ஆனந்தம் டில்லிக்கு!

இந்த அலங்கோலத்தை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

*

# இந்தி-ஆட்சிமொழியா?

நானும், எதிர்க்கட்சியினர் வேறு சிலரும் கலந்துகொண்ட மொழி ஆய்வுக் கமிட்டியில், இந்தி ஆட்சி மொழியாவதற்கு நான் சம்மதம் அளித்ததாகத் தெரிவிக்கும் பத்திரிக்கைச் செய்திகள் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

தப்பர்த்தம் தரக்கூடிய வகையில் அமைந்துள்ள அத்தகைய அறிக்கைகளால் தவருன எண்ணங்கள் எழக்கூடுமாகையால், இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு நான் சம்மதம் அளித்துவிட்டேன் என்ற கூற்றினை, இதன் மூலம் மறுக்கிறேன்.

உண்மையைக் கவனிக்குமிடத்து, அந்தக் கமிட்டி, இந்தி, ஆட்சி மொழியாக இருக்கலாமா என்பது பற்றி விவாதித்து முடிவு எடுக்கக் கூட்டப்பட்டதல்ல.

1965-ல், ஆங்கிலத்தை நீக்கிவிட்டு, இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதற்கான வழி வகைகளை எடுத்தும்கூறும் கேர் கமிட்டி அறிக்கை பற்றி, சென்னை சர்க்கார், இந்திய சர்க்காருக்கு தமது கருத்தைத் தெரிவிக்க விரும்பினர்.

இந்த அம்சத்தைக் கவனித்து, பலரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் ஒரு யோசனையைக் காணவே, கமிட்டி கூட்டப்பட்டது —இந்தி ஆட்சி மொழி ஆக இருப்பதா, என்பதுபற்றி எமது கருத்தினை அறியவோ, ஆதரவு பெறவோ அல்ல.

அரசியல் சட்டத்தில், இந்தி ஆட்சி மொழி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; சட்டத்தின் படி கிடைத்துள்ள இந்த நிலையைமையை, நடைமுறைக்கு எப்படிக் கொண்டு வருவது என்பதுதான் கேர் கமிட்டியினரின் அறிக்கையின் சாரமாகும்.

அரசியல் சட்டத்தைத் தயாரித்தவர்கள், இந்தியை ஆட்சிமொழி அந்தஸ்துள்ளதாகச் செய்தது மாபெரும் தவறு என்று கருதியும், கூறியும், இந்தியைத் திணிக்கும் முயற்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தும், அரசியல் சட்டத்திலேயே பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தியும் வருகிற ஒரு கட்சியைச் சார்ந்தவன் நான்.

நான் கமிட்டிக்கு அழைக்கப்பட்டது, இந்த என்னுடைய கட்சியின் கொள்கையை விட்டுக் கொடுத்துவிடவோ, அல்லது அதைக் கவனியாமல் இருந்து விடவோ, அல்ல.

கேர் கமிட்டி அறிக்கையின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினை குறித்துக் கருத்து அறியவே எங்கள் உதவி நாடப்பட்டது. பல்வேறு கட்சியினர், வெவ்வேருன பல கருத்துகளை, விவாதித்தான பிறகு,

ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருந்து வர வேண்டும் என்றும்;

இதற்கான முறையிலே பார்லிமெண்டு சட்ட—சம்மதம் தரவேண்டும் என்றும்—

இதனை எப்பொழுது மாற்றுவதாக இருப்பினும், மாநில சட்டசபையின் சம்மதம் பெற்ருக வேண்டும் என்றும்

இந்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறும் திட்டத்தைச் சென்னை சர்க்கார் தீட்டிற்று.

எல்லா எதிர்க்கட்சிகளும், ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் (Prolonged Period) ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்குச் சம்மதம் தெரிவித்தன. இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு நான் சம்மதம் அளிக்கவில்லை. அதிலே பொருத்தமும் இல்லை; ஏனெனில் அரசியல் சட்டம் இந்தியை ஆட்சி என்று குறிப்பிட்டிருக்கிறது; என் கட்சியும், வேறு சில கட்சிகளும் (இந்தி ஆட்சி மொழி என்று சட்டம் கூறுவதை) எதிர்த்துக் கிளர்ச்சி செய்து கொண்டு வருகின்றன.

கமிட்டியில், ஒன்றுக்கொன்று மிக வேறுபட்ட கருத்துகொண்ட கட்சிகளெல்லாம் இருந்தன. 'ஆங்கிலத்தை அகற்றியே தீர வேண்டும்-இந்தியைப் புகுத்தியே 'ஆகவேண்டும்' என்று உறுதியாகக் கூறிடும் பிரஜா-சோஷலிஸ்டு கட்சியும் இருந்தது; 'இந்தி எந்த முறையிலும், வடிவிலும் புகலாகாது' என்று கூறும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நானும் இருந்தேன். உடனடியாக வர இருக்கும் விபத்து குறித்து எங்கள் கருத்து அறிய விழைந்தனர்; அனைவரும் ஆங்கிலம் தொடர்ந்து நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதற்குச் சம்மதம் அளித்தோம்.

தத்தமது கட்சியின் கருத்துக்களைக் கொண்ட — மாறுபாடான கருத்துக்கொண்ட அறிக்கைகளையும் சர்க்கார் அறிக்கையுடன் இணைத்து அனுப்பலாமா என்று கேட்டபோது, கனம் சுப்பிரமணியம் அவர்கள், 'எந்தக் கட்சியும் அதனுடைய கொள்கையை விட்டுவிட்டதாக எண்ணத் தேவையில்லை; வர இருக்கும் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு —கேர் கமிட்டியின் விளைவுகளைக் கவனிப்பதற்குத்தான் ஒன்றுபட்ட கருத்தை அறிகிருேம்—பெறுகிருேம்' என்று சொன்னர்.

எனவே, எல்லா எதிர்க்கட்சிகளும், ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருப்பதற்குச் சம்மதம் அளித்தன.

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து, திட்டவட்டமாகக் கூறப்பட்டாகிவிட்டது — (1) இந்தி ஆட்சிமொழி என்று தி. மு. க. ஏற்க மறுக்கிறது; (2) தனி அரசு காணவேண்டும் என்று பாடுபட்டு வரும் கழகமாதலால், அந்த அரசு அமையும்போது, 'அகில இந்திய பாஷை' என்ற பேச்சுக்கே, அவசியமோ அர்த்தமோ இல்லை என்று கருதுகிறது.**

என்வே, தி. மு. கழகத்தையோ அதன் சார்பில் என்னையோ அழைத்து, 'இந்தியை அகில இந்திய பாஷை என்று ஏற்கச் சம்மதமா? என்று கேட்பதிலே பொருள் இல்லை.

கேர் கமிஷன் அறிக்கையின் விளைவாகத் தோன்றி, நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை

—நெருக்கடியை எவ்விதம் சமாளிப்பது என்பதுதான் கமிட்டியின் முன்பு இருந்த பணி. இதிலேதான் ஒருமித்த கருத்து :தேடப்பட்டது; அடிப்படைத் தத்துவங்கள் பற்றி அல்ல.

தி.மு. கழகம் கொண்டுள்ள கொள்கைகளை நான் திட்டவட்டமாகவே தெரிவிக்க விரும்புகிறேன்—(1) இந்தி ஆட்சிமொழியாக இருத்தல் கூடாது; (2)தனித் திராவிட நாடு பெறும் நிலையை எதிர்பார்த்து இருக்கும் நாங்கள், அகில இந்தியாவுக்கு ஒரு ஆட்சிமொழி வேண்டும் என்ற தத்துவத்தையே, பொருளற்றது—தேவையற்றது என்று கருதுகிறோம்.

பத்திரிகையில் வெளிவந்த செய்திகளால், ஏதேனும் தவருன எண்ணம் ஏற்பட்டிருக்குமானல், அதனை நீக்கிட விரும்புகிறேன்.

இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கு சம்மதம் தரச் சொல்லி என்னை அழைக்கவும் இல்லை; நான் சம்மதம் தரவும் இல்லை.

கேர் கமிட்டி அறிக்கையின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினை குறித்தே கலந்தாலோசிக்க நேரிட்டது; அதில், அனைவரும், 'ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்' என்று கூறினர்.

இந்தவிஷயத்தில்தான் எல்லாக் கட்சிகளும் ஒருமுகமான சம்மதம் அளித்தன.

அந்தந்தக் கட்சிகளின் அடிப்படைத் தத்துவங்கள், அந்தந்தக் கட்சிகளின் தனி உரிமை.

எங்களைக் கலந்தாலோசித்து, எமது சில கருத்துக்களை இணைத்து சென்னை சர்க்கார் ஒரு 'மனு' தயாரித்தனர்; நடந்தது அவ்வளவுதான்.

அது எல்லாக் கட்சிகளும் கூடித் தயாரித்த அறிக்கை அல்ல.

அதிலே, நாங்கள் கையெழுத்து இடவுமில்லை; அதில் காணப்படும் யாவும் எங்களுக்கு முழுக்க முழுக்க ஒத்தவை என்றும் கூறுவதற்கில்லை.

1965-க்குப் பிறகும், தொடர்ந்து நீண்டகாலம் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பதிலேதான் பொதுவான சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்தி ஆட்சி மொழியாவதற்கு நான் சம்மதம் அளித்தேன் என்று கூறுவது உண்மையைத் திரித்துக் கூறுவதாகும்.

அண்ணாதுரை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் நோக்கத்தில் வானெலி. தபால்--தந்தி, படக்காட்சி, நாணய முறை, அரசாங்க அறிவிப்புகள், கல்வித் துறை போன்ற அரசாங்க நிர்வாகத்திற்குட்பட்ட எல்லா அமைப்புகளிலும் இந்தியை நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிக்கும் முயற்சிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிடத்தில் அந்தந்தப் பகுதிகளில் தாய் மொழி ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் தொடர் மொழியாகவும் இருந்திட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே வலியுறுத்தியிருப்பதை மீண்டும் வலியுறுத்துகிறது.

1965-ம் ஆண்டுக்குள் இந்தியை ஆட்சி மொழியாக்க முயற்சிக்கும் டெல்லி ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்துத் தென்னகத்திலுள்ள எல்லா கட்சிகளும், எல்லா தலைவர்களும், சென்னை அரசியலாரும் திட்ட வட்டமான கண்டனத்தைத் தெரிவித்திருந்தும், அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்தி, இந்தியைத் திணிகக அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைக் கண்டிப்பதுடன், இம்முயற்சி தொடர்ந்து நடைபெறுமேயானுல் அதைத் தடுத்து நிறுத்துவதற்காக இறுதிவரை போராடத் தயாராகுமாறு தென்னக மக்களை இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

—முன்: அண்ணதுரை

—வழி: என். வி. நடராசன்

,, இரா. செழியன்

,, வி. பி. இராமன்

,, ஏ. கோவிந்தசாமி

எம். எல். ஏ.

## ★ நாஞ்சில் ★

இக்கட்டுகள் ஏராளம் வந்திடினும், முட்டுக்கட்டைகள் பல முளைத்து எழுந்தாலும், அவைகளை யெல்லாம் தாண்டித் தள்ளிவிட்டுச் செல்லும் விடுதலை இயக்கம்—என்கிற முதுமொழிக்கு இலக்காக, இன்றைய தினம் வளர்ந்து வருகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த வளர்ச்சியைக் காட்டும் வகையில் கடந்த கிழமை நாஞ்சில் மாவட்டத்தின் மாநாடு, நாகர்கோயிலில் சீரும் சிறப்புடன் நடந்திருக்கிறது. நாட்டுக்குக் கலையையும் தன் வருவாயின் பெரும் பகுதியையும் அளித்த நல்லவராம் கலைவாணரின் நினைவையும், கொள்கைவீரன் — குன்றாத மனமுடைய சேரன் கே. வி. கே. சாமியின் அருந்தொண்டினை நினைவூட்டும் வகையிலும், அமைந்த அம்மாநாட்டுக்கு, நமது குரலை டில்லி ஏகாதிபத்தியம் உணரும் வகையில் பணியாற்றிவரும் சொல்லின் செல்வர் ஈ. வே. கி. சம்பத் தலைமை வகித்தார். படித்ததும், பட்டம் பெற்றதும் பணம் பெறவே ஒழிய வேறு எதற்குமல்ல என்று எண்ணிடுவோரைப் போலன்றி, தாயகத்தின் விடுதலைக்குப் பயன்படுத்தும் ஆர்வம் கொண்ட மதுரை டாக்டர் அருணசலம் மாநாட்டைத் திறந்துவைத்திருக்கிறார். மாணவப் பருவ முதல் கொள்கைக்குத் தன் வாழ்வை அர்ப்பணித்துவிட்ட தோழர் மனோகரன் எம். ஏ.-வின் தலைமையில், தோழர்கள் பி. சாம், பி.ஏ; பி.எல்; ஏ. இராமசாமி ஆகியோரைச் செயலாளர்களாகவும் கொண்ட வரவேற்புக் குழுவினர், சிறந்தமுறையில், மாநாட்டினை நடத்தி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்திருக்கின்றனர். இசைவல்லுநர் எம்.கே.கோவிந்தராச பாகவதரின் தமிழிசையும், கழக மணிகளின் நாடக ஓவியமும், சிறப்பாக நடைபெற்றிருக்கிறது.

நாஞ்சில் மாவட்டம், நமக்கும் கேரளத்துக்குமிடையே தொடர்பு உண்டுபண்ணும் ஒரு இடத்திலிருப்பதாகும். அது, டில்லிபீடத்தின் வஞ்சனையின் காரணமாக பெற்றுள்ள இழப்புகள் பல! ஏனைய இடங்களைப் போலவே தொழில் துறையிலும், ஏனைய வகைகளிலும், மிகவும் பிற்போக்கான நிலையிலிருப்பதாகும். ஆனால், தமிழர்களுக்கே உரித்தான நல் மனதும், வீர உருவும் பெற்று விளங்கும் நல்லவர்களும், வல்லவர்களும் உலவும் மாவட்டமாகும் அது. அங்கே, வளர்ந்து வரும், நமது குரல் கண்டு மகிழ்கிறோம்! குரல், ஒவ்வொரு குடிலுக்கும் புகவும்-புகாத மனந்தோறும் புகவுமான வகையில், நமது தோழர்கள் பணிபுரிவார்கள் என்கிற நம்பிக்கையையும் மாநாடு, நமக்களிக்கிறது!!

நம்பிக்கை வளரட்டும், நாஞ்சில் பெருமை பெறட்டும், நாடு புதுவாழ்வு பெறட்டும், என்று நாஞ்சில் மாவட்ட கழகத்தினருக்கும், கொள்கை வீரர்களுக்கும், நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.